தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆடி 2 (18-7-'59). சனிக்கிழமை | இதழ் 5

இனி இல்லை அத்தொல்லை!

பொழுது சாயும் நேரம். இன்னும் சிறிதுநேரத்தில் பகல் போய்விடும்.

வயதான கிழவியொருத்தி உணவு விடுதி ஒன்றின் முன்னால் நின்று கொண்டிருக்கிறாள். மாதக் கணக்காக என்னை காணாத பரட்டைத்தலை. குழி விழுந்த கண்கள். உலர்ந்த உதடுகள். ஒட்டிய வயிறு. சுருக்கம் விழுந்த உடல். மானத்தை மறைப்பதற்காக அவள் உடுத்தியிருந்த அழுக்குத் துணி அங்கும் இங்குமாகக் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது.

உணவு விடுதியிலிருந்து வருவோரிடம் தன் வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்வதற்காகக் காலணா, அரையணாக் காசுகளை அவள் எதிர்பார்த்து நின்றாள்.

"இனியொரு விதி
செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொருவனுக்
குணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்!"

உணவு விடுதி வானொலிப் பெட்டி பாடிக்கொண்டிருந்தது.

அலங்கார உடையணிந்த சீமான்கள் இருவர் விடுதியிலிருந்து வெளியே வந்தனர்.

"ஐயா! ஐயா! காலணாக் குடுங்க ஐயா! பசிக் கொடுமை ஐயா! நாலு நாளா பட்டினி! காலணாக் குடுங்க ஐயா! .."

கிழவி கெஞ்சினாள். மன்றாடினாள். வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்வதற்காகக் காலணா பிச்சை கேட்டாள்.

"சீ! போ!" கிழவி மேல் எரிந்து விழுந்தார் அவர். "இவங்க தொல்லையே பெருந் தொல்லையாப் போச்சு! ஐ நவ் டோன்ட் எக்ரி வித் தி பெகர் பிராபலம் சார்!..."

தன் நண்பரைப் பார்த்து ஆங்கிலத்தில் கூறிவிட்டு, உணவு விடுதியிலிருந்து வேகமாக வெளியேறினார் அந்தப் பெரிய மனிதர்.

கிழவி அவர்களை விடவில்லை.

"ஐயா! ஐயா! புண்ணியமாயப் போகட்டும் ஐயா! புள்ளைகுட்டிகளைப் பெத்த ஐயா! காலணாக் குடுங்க சாமி! மகராசனா இருப்பீங்க! ஒரு காலணா குடுங்க சாமி!..."

"போ!...போ!..." அந்த அதட்டினார் "இவங்களையெல்லாம் போலீசில் பிடிச்சுக் கொடுத்தாத்தான் சும்மா இருப்பாங்க!...நாய்ஸ்டி பெகர்ஸ்!..." தன் பெருந்தன்மையை நண்பரிடம் காட்டிக்கொண்டார்.

"ஐயா!...சாமி!..." என்று கிழவி அவர்களைப் பின் தொடர்ந்தாள்

உணவு விடுதியில் கிழவியின் வயிற்றுப்பசியைப் போக்கிக்கொள்வதற்கு வேண்டிய உணவுப்பொருள்கள் இல்லாமல் போகவில்லை! அவளைப்போல் ஆயிரம் பேருக்கு வேண்டுமானாலும் உணவு அளிக்கும் அளவு வசதி படைத்த பெரிய விடுதி அது! இருந்தபோதிலும் அவளுக்கு வயிற்றுப்பசியைப் போக்க முடியவில்லை!...உணவு கிடைக்கவில்லை! வருவோர் போவோரிடம் பிச்சை கேட்கிறாள்!

பணம் படைத்தவர்கள் உண்டு களித்து 'ஏப்பம்' விட்டுக்கொண்டே வெளியேறுகிறார்கள்; பசியெடுக்காத போதும் மேலும் மேலும் உண்டு வயிற்றை நிரப்பிக்கொள்கிறார்கள்!

உணவு விடுதியில் உணவு இருக்கிறது! சிலர் அதை உண்டு மகிழ்கிறார்கள்! சிலர் பசியோடு ஏங்கிக் காத்துநிற்கிறார்கள்! ஏன் இந்த நிலை?

பிச்சை எடுப்பது பாவம் என்பது அவளுக்குத் தெரியும். பாவ புண்ணியத்தைப் பார்த்தால் உயிர் நிலைக்காது! உயிரை விட்டுவிட அவளுக்கு விருப்பமில்லை!

மாலை நான்கு மணியிலிருந்தே அவள் அந்த உணவு விடுதியின் முன்னால் நிற்கிறாள். எவ்வளவோ பேர்களைசந்தித்துவிட்டாள். காலணாக் காசுகூடக் கிடைக்கவில்லை. ஆகையால் எப்படியாவது இவர்களிடமிருந்து காலணாக்காசு பெறவேண்டுமென்ற ஆசையால் பின்தொடர்ந்து செல்கிறாள்.

"ஐயா! ஐயா! காலணாக் குடுங்க ஐயா!..."

"மரியாதையாச் சொன்னா...போகமாட்டா! இவர்களையெல்லாம் சும்மா விடக்கூடாது சார்!..."

நாகரிகமாக ஆடையணிந்து சமுதாயத்தில் உயர் நிலையில் இருப்பவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் இவர்களை, கந்தல் துணியும் பரட்டைத் தலையும், குழிந்த கண்களும் கூனல் முதுகும் கொண்ட ஒரு கிழப் பிச்சைக்காரி பின்தொடர்வதா? பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்! இவர்களது கௌரவம் என்னவாகும்? ஆமாம்! எல்லோரும் இவர்களைப் பார்க்கிறார்களே!...

அந்தப் பெரிய மனிதர் தன் கையிலிருந்த ஊன்றுகோலால் கிழவியின் மேல் ஓங்கி அடித்தார். பசிக் கொடுமை ஒரு புறம். அடியின் வேகம் மற்றொரு புறம். அவள் கண்கள் பார்வைச் சக்தியை இழந்தன. கிழவி நிலை தடுமாறினாள். பக்கத்தில் நின்ற விளக்குக் கம்பத்தில் அவள் தலை மோதியது. குப்புற மண்ணில் சாய்ந்தாள்.

பெருங்கூட்டம் கூடிவிட்டது! பாதை வழியாகப் போவோரும், வருவோரும் வேடிக்கைப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். பெரிய மனிதருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இப்படி ஆகும் என்று அவர் கனவிலும் கருதவில்லை. விழித்துக் கொண்டே நின்றார்! பக்கத்தில் திரும்பி தன் நண்பரைப் பார்த்தார். அவருக்கு பகீர்' என்றது! அவர் அப்பொழுதே நழுவிவிட்டார்.

"கிழவிக்கு உயிர் இருக்கிறதா என்று பாருங்கள்?..." கூட்டத்திலிருந்து பல குரல்கள் கிளம்பின.

"மெதுவாக மூச்சு வருகிறது ஐயா!" கிழவியின் மூக்கின் முன்னால் விரலை நீட்டிக் காட்டிக்கொண்டே பதில் சொன்னார் ஒருவர்.

"மூச்சே நின்று விட்டது! கிழவி செத்துவிட்டாள் ஐயா!..." கூட்டத்தை விலக்கிக்கொண்டே வெளியே வந்தார் ஒரு அவசரக்காரர்...

பெரிய மனிதருக்கு வியர்த்துக் கொட்டியது! தரையோடு தரையாகச் சிலையாக சமைந்து நின்றார்!

"என்ன ஐயா? அறிவு இருக்கா? அந்த அம்மா காலணாக் காசு கேட்டதற்கு இப்படியா அடிக்கிறது?..."

— 10-ம் பக்கம் —

கொள்ளையோ, கொள்ளை !

(2-ம் பக்கம்)

ஊழலோ ஊழல்! கொள்ளையோ கொள்ளை!

"திருடன் வந்தானா?"

"ஆம்!"

"நள்ளிரவில் வந்தானோ?"

"இல்லை! பட்டப்பகலில் வந்தான்?"

"கரிய உடைகள் உடுத்து வந்தானோ?"

"இல்லை! இல்லை! தும்பைவெள்ளை உடை உடுத்தியிருந்தான்?"

"முகமூடி அணிந்திருந்தானா?"

"காந்திக்குல்லா போட்டிருந்தான்!"

'முகத்தில் கடு கடுப்புணர்ச்சி இருந்ததா?"

"சாந்த சொரூபிபோல இருந்தான்!"

"அடித்துவிடுவேன்; கொன்றுவிடுவேன் என்று மருட்டினானோ?"

"வந்தேமாதரம்! ஜெய் ஹிந்த்! வாழ்க காந்தி நாமம்! என்றான்!"

"அப்படிச் செய்பவன் திருடனாயிருக்கமாட்டானே?"

"ஆமாம், காங்கிரஸ்காரனாயிருக்கிறான்!"

"அவனா திருடினான்? விந்தையாய் இருக்கிறதே!"

"ஆமாம்! திருடன் இருட்டில் வருவான்; முகமூடி போட்டுக்கொண்டு வருவான்; கையில் உள்ள கத்தியையோ அரிவாளையோ காட்டி மிரட்டுவான். கழுத்தில் கிடக்கும் தாலியையோ பையில் இருக்கும் ஐந்து பத்தையோ, பிடுங்கிக் கொண்டு ஓடுவான்! இப்படித்தான் அந்தப் பிழைக்கத் தெரியாத திருடன் வருவான்; போவான். ஆனால் இந்தக் காங்கிரஸ்காரன் அப்படி வேண்டாத வழிகளில் சென்று உடம்பை அலட்டிக்கொள்ள மாட்டான். கதர் உடுத்தி, காந்தி பெயர் சொல்லி, பட்டப்பகலில் வருவான். மந்திரி என்றும் தியாகி என்றும் பட்டயம் மாட்டியிருப்பான். அவன் செய்யும் களவை எவரும் கண்டு பிடிக்கமுடியாது; கண்டவனும் வாய் திறக்கமாட்டான்!"

"அப்படியானால் உனக்கெப்படித் தெரிந்தது?"

"நானும் என்போன்ற சிலரும் இந்த மாதிரி அநீதிகளை வேரோடு கண்டுபிடித்து வெந்நீர் ஊற்ற முனைகிறோம்! காங்கிரசார் நல்லோர் என்ற பட்டயத்தோடு நாட்டுமக்கள் மனத்தைக் கொள்ளையடிக்கும் செயல்களை உடனுக்குடன் கண்டிக்கத் துடிக்கிறோம். அப்படி முனைவதால் மூடி மறைக்கப்பட்ட ஊழல்கள் பத்துக்கு மூன்றாகிலும் வெளியில்தெரிகின்றன. அவற்றைத்தான் உங்கள் பார்வைக்கு வைத்து, நீதி கேட்கிறோம்! பட்டதைச் சொல்கிறோம்; நாடு கெட்டதை எழுதுகிறோம்! உங்கள் மனம் அவற்றை உணர்ந்தால், போதும்!"

"சரி, சரி! நடத்தைச் சொல்!"

★

பாரதமெங்கும் பட்டொளி வீசும் கொடியினை ஏந்திப் பிடித்திருக்கும் காங்கிரஸ்காரனாய்ப் பிறக்க வேண்டும். அல்லது அவன் மகனாய்-மகளாய்ப் பிறக்க வேண்டும்!

இந்திரா, இயக்கத்திற்கு ஆற்றிய அரும்பெரும் தொண்டுகள் எத்துணை? எத்துணை முறை இருட்டுச் சிறையிலும், கொடும் தனிமையிலும் கிடந்திருக்கிறார்கள்? எங்கெங்கே அடிபட்டு மிதிபட்டுக்கொள்கையைக் காத்தார்?-இந்த வகையில் அவரை விடத் தொண்டாற்றியோர், அல்லற்பட்டு உருவழிந்தோர், சிறைப்பட்டு நல் வாழ்விழந்தோர் எவ்வளவோ பேர் இருந்தும், ஏன் இந்திராவுக்கு மட்டும் இந்த நல் வாழ்வு? அன்று அடிபட்டு, மிதிப்பட்டு, உருக்குலைந்தோரெல்லாம் ஏன் மாள்கின்றனர், வறிதே?

இந்த வினாக்களுக்கெல்லாம் ஒரே விடை யிதுதான்: "அவர் உலகம் சுற்றும் பண்டிதரின் மகள்!" இந்திரா மட்டும் அமைச்சர் மகள் என்பதால் அவ்வளவு நலங்களையும் பெறுவதா? அவளுக்கு நாங்களென்ன மட்டமா எனக் கிளம்பிய பலரை நாம் அறிவோம், நன்கு.

மொரார்ஜி வீட்டுச் சேதிகள் ஏடுகளில் பளிச்சிட்டன. பிரதாப் சிங் கெய்ரானின் மகன்கூடக் கொள்ளைக் கூட்டத்தில் திரிந்ததாக ஒரு பேச்சு. இந்தப் பட்டியலிலே மற்றொரு

இந்திரா கட்சிவளர்த்த ஊழல்

அமைச்சரின் மகனும் சிக்கியுள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

சில அமைச்சர்களின் மக்கள், பதவி பெறுகிறார்கள். சிலர் தம் தந்தையர் பெயர் கூறி வெளியாரிடம் பணம் முதலிய பல சலுகைகள் பெறுகின்றனர். இன்னும் சில அமைச்சரின் மக்கள் அடுத்த அமைச்சர்களுக்காக, அரசினர் தரும் கார்களை எடுத்துச் சென்று மரீனா விளக்குக் கம்பத்தில் மோதுவர். நான் குறிப்பிடும் மந்திரி மகனோ, தன்னிடம் உள்ள ஓட்டைப் பொருளைத் தந்து அரசினர் பணத்தைப் பறித்திருக்கிறார்! முந்திரா ஊழல் போன்று, இதுவும் ஒன்று!

★

பஞ்சாப் அரசியல் குழம்பி நிலை குலைந்து, கிடக்கும் நேரம் இது. அந்த மாநிலத்தின் அமைச்சர் குழுவில் ஒருவர் கியான்சிங்ரேர்வாலா. அவர் தன்னிடமிருந்த குழாய்க் கிணறு ஒன்றைப் பஞ்சாப் மாநில அரசுக்கு விற்றிருக்கிறார்.

மாநில அரசுக்கு, குழாய்க் கிணறு தேவைதான். கியான் சிங்கிற்கு பட்டியாலா மாவட்டத்தில் உள்ள ராரா என்ற ஊரில் உள்ள பண்ணையில் ஒரு குழாய்க் கிணறு இருந்தது. ஆனால் அது இரண்டாண்டாய்ச் சீர்கெட்டுக் கிடந்ததாலும், கியான் சிங் தனது பண்ணையில் ஒரு பகுதியை விற்றுவிட்டதாலும், அதற்கு வேலை இல்லை. அரசாங்கத்தின் நீர்ப்பாசனத் துறைக்கு ஒரு குழாய்க் கிணறு தேவைப்படுகிறது என்று தெரிய வர்த அமைச்சர் தன்பண்ணையில் கிடப்பதை விலைக்கு எடுத்துக் கொள்ளச் சொன்னார். அமைச்சர் சொன்னபின் 'பணிவுள்ள உண்மை ஊழியர்கள்'' மறுக்கமுடியுமா? அப்படியே அதை வாங்கிக்கொண்டனராம்!

அரசினரின் மதிப்பீட்டுக் குழுவினராகிய மூன்று பொறியியல்வல்லார் கூடி, அதைச் சோதித்து, ஆராய்ந்து விலை கூறினாராம், முதலில் ரூ 17 ஆயிரம் என்றும் பின் 18 ஆயிரம் என்றும் பின் 21 ஆயிரம் என்றும் விலை உயர்ந்தது.

அமைச்சரின் மகன் "விலை சரியாக மதிப்பிடப்படவில்லை!" எனத் திரும்பத் திரும்பச் சொன்னதனால் தான் அந்தக் குழுவினர் மறுபடியும் மறுபடியும் விலையை உயர்த்தியிருக்கின்றனர். அமைச்சர் மகன் பணத்தைப் பெறுவதற்கு முன்னரே சில கீழ் அதிகாரிகள், "இப்படிப்பட்ட ஒரு பெரிய பேரத்திற்கு தில்லி அரசின் அனுமதியையும முன் கூட்டியே வேண்டும்!''என்றதற்கு, மேல் அதிகாரிஅவர்கள் வாயை மூடச்செய்தாராம். ஐந்து திங்கள் இந்தப் பேரம் நடந்திருக்கிறது. ஆனால் அனைத்தும், அம்மாநில முதல் அமைச்சர்க்குத் தெரியாமலே மறைவாகச்செய்யப்பட்டிருக்கின்றன. மாநில முதலமைச்சர் பிரதாப்சிங் கெய்ரான் அப்பழுக்கற்ற மனிதர் அல்லர் எனினும், அவர் கியான் சிங்கிற்கு நேர் விரோதமானவர் அவருக்குத் தெரிந்தால் வெற்றி கிட்டாதென்று அமைச்சர் இந்தப் பேரத்தை மூடி மறைத்திருக்கிறார்! அலுவலரும் பயந்து ஒத்துப் போயிருக்கின்றனர். மந்திரியின் இளைய மகனான குர்பிரீத்சிங் இந்தப் பேரத்தை நடத்தவும் பணத்தைப் பெறவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

நாளடைவில் சேதி வெளியாகி, அதை அறிந்த முதலமைச்சர் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்! ஆக நான்கு குற்றங்கள் அமைச்சர் மீது சாட்டப்படுகின்றன.

★ அமைச்சர் தனது செல்வாக்கைக் கொண்டு, நீர்ப்பாசனத் துறையை அதிகாரப்பூர்வ மற்ற பேரத்தில் சிக்க வைத்திருக்கிறார்.

★ குழாய்க்கிணறுக்காகத் தரப்பட்ட பணம் அதிகப்படியானது, மிக மிக.

★ நம்பிக்கை மோசடி நடந்திருக்கிறது. மூன்று பொறியியல் வல்லார் இதை வாங்குமுன் பரிசோதித்து விலைமதிப்பிட்டிருந்தும், வாங்கிய பின்தான் இது சீர்கெட்டுக் கிடக்கிறது. என்றறிந்திருக்கின்றனர்; மூலையில் தூக்கிப்போட்டிருக்கின்றனர்.

★ மிக முக்கியமான சட்ட விதிகள் கூட இதில் மீறப்பட்டிருக்கின்றன.

அதிகாரத் துஷ்பிரயோகம், அதிகப்படியான தொகை, நம்பிக்கை மோசடி, சட்டம் மீறல் ஆகிய நான்கு மாபெரும் குற்றங்கள் அமைச்சராலேயே செய்யப்பட்டிருக்கின்றன.

குற்றங்களை ஆராய்ந்தனர், காவல் துறையினர்; நடவடிக்கைகள் தொடர்புடையோர்மேல் எடுக்கப்பட்டன. இதில் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியியல் வல்லுனர் எஸ்.என்.கபூர் என்பவர் பதவி இறக்கம் செய்யப்பட்டு அவர் முன்பு பணியற்றிய நங்கல் திட்டத்திற்குப் பழைய சாதாரண பொறியியல் வல்லுனராக அனுப்பப்பட்டுவிட்டார். அமைச்சரின் பதவியை முதலமைச்சர் எடுத்துக் கொண்டு, அவரை வெளியேற்றி விட்டார்.

நாயையடிக்க நாளும் நியாயமும் பார்க்கப் போகின்றாராம் முதலமைச்சர்! விசாரணை ஒன்று நடத்தி உண்மையறிந்து கியான் சிங்கைத் தண்டிக்கப்போகிறாராம், அவர்! ஊழல் புரிந்தவனை விசாரிக்க ஒரு குழுவாம்! அது கூடுவதற்கு ஒருநாளாம்! நல்ல வேடிக்கை! அதைவிட வேடிக்கை இது: அந்த மாநிலத்தின் ஊழல் எதிர்ப்புக்குழுவின் தலைவர், முதலமைச்சர். அவர் அக்குழுவின்மூலம் விசாரித்தால் உண்மை ஏற்படாதாம். அதனால் ஓர் அறவாணரோ தலைமைப் பொறியியல் வல்லுனரோதான் இதை விசாரிக்க வேண்டுமென்றாராம் கியான்சிங். இவர்கள் நாயை அடிக்க நாளும் நியாயமும் பார்க்கின்றனர்! நாயோ, புளியமிளாரால் அடிக்கக்கூடாது; அதுவும் பொதுவிடத்தில் அடிக்கக் கூடாது! மூங்கில் கழியால்தான் அடிக்கவேண்டும். அதுவும் மூலையில்வைத்துத்தான் அடிக்கவேண்டுமென்கிறது!

ஆமாம்! இதுபோல்தான் இருக்கின்றன, அமைச்சரும் அவர் மகனும் பேசும் பேச்சுக்கள்! காங்கிரஸ் தலைவரும், தில்லி அரசும் இவற்றை அறிந்தும் வாயை மூடிக்கொண்டது ஏன்? ஏன்?

★

"வடநாட்டில்தானே இந்த அவலம்? அங்கே அப்படித்தான் அயோக்கியர்களாய் இருப்பர்! நமது பூமியில் இருப்போர் அத்துணை பேரும் அயோக்கியர்கள்; உடல் உழைப்பில் நம்பிக்கையுள்ளோர்; ஊர்ச்சொத்துக்கு ஆசைப்படாதோர்!" என்று சிலர் "பிரித்துப் பேசி" மறைத்துவிட நினைக்கலாம். நமக்கோ அது இயலாது. இங்கேயும் உள்ள, முறைகெட்டோரை ஊர்ச் சொத்துக்கு ஓடி வருவோரைக் கட்டாயம் கண்டிப்போம்!

அங்கே மந்திரியின் மகன் பண மோசடிக்கு உடந்தையாய் இருந்தானென்றால், இங்கே "தியாகி"யின் மகனே அந்த அளவுக்கு எழுந்தாய் விட்டது!

— 10-ம் பக்கம் —

மந்திரியின் மகனும் தியாகியின் மகனும் மூலவர்கள்!

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 18—7—'59 ‖ இதழ் 5

விரைவில் வரும் ஆணை! கருத்துக்கணை-வில் எடுக்கும் தானை!

காவிரி யாறு கரை புரண்டோடும் வள நிலத்திலே உற்சாகம் கரை புரண்டோடியிருக்கிறது. பச்சைப் பயிர்கள் தழைத்து வளரும் செந்நெற் கழனியிலே, திராவிடமெங்கும் தழைத்து வளரும் மறவர் படை கூடியிருக்கிறது.

"வலிவுண்டு; நெஞ்சத் துணிவுண்டு; திட்டமிட்டுப் பாடுபட்டால் திராவிடத்திற்கு வளமுண்டு; வாழ்வுண்டு!" என்று அறிவுரையும் நிலை விளக்கமும் தரும் பொதுச் செயலாளர் தலைமையிலே, படை திரண்டது! பயனுள்ள பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது!

"கட்டளை பிறந்ததும் தோள் தட்டி யெழுவோம்; பகை வெட்டி வெல்வோம்! 'தலை வணங்காப் பரம்பரை, திராவிடர் பரம்பரை!' என்ற சரிதத்தைச் செங்குருதியால் எழுதிக் காட்டுவோம்! 'அழிந்திடு பகையே!' என விரைந்தோட்டுவோம்!" எனக் கூறி ஆணை வழி நடக்கும் தோள் வலி மிக்கத் தொண்டர்கள் எழுந்த காட்சியைக் கண்டோம்!

ஆமாம்! பூரிக்கும் தோளும் துடிக்கும் நெஞ்சும் கொண்டு "வெஞ்சமர் எங்கே? எங்கே?" என்று கேட்கும் அடலேறுகளுக்கு வழி காட்டும் பெருமையை, மாயூரம் பெற்றிருக்கிறது.

எந்தப் பொதுக் குழுவையும் காண இவ்வளவு மக்கள் இதுவரை திரண்டதில்லை. 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருக்கின்றனர் பொதுக் குழுவின் முடிவுகளை அறிய; இதற்கு முன் எந்தக் கூட்டத்திற்கும் வராத அளவு உறுப்பினர்கள் ஒரு சிலர் தவிர அனைவரும் வந்திருக்கின்றனர். மழை ஓயாது பெய்தும், மக்கள் கலையாமல் திரண்டிருக்கின்றனர். உறுப்பினரிடையும் மக்களிடையும் அத்துணை ஆதரவு; அவ்வளவு ஆர்வம்!

நாட்டைக் கப்பியுள்ள இருட் படலங்களைப்பற்றியும், நாம் ஆற்ற வேண்டிய கடன்களைப்பற்றியும், ஆள்வோர் உணர வேண்டிய குறைபாடுகளைப்பற்றியும் பொதுக் குழுவினர் நல்ல பல முடிவுகளை எடுத்திருக்கின்றனர்.

பொதுக் குழுவுக்குத் தலைமை ஏற்ற பொதுச் செயலாளர் புதுக்கோட்டை நிகழ்ச்சிகளையும் முடிவுகளையும் விமர்சித்திருக்கிறார். நகராட்சித் தேர்தல்களில் நல்ல முடிவு காணத் துணையாயிருந்த தொண்டர்களை அவர் பாராட்டியிருக்கிறார். மேலும் உறுப்பினர் சேர்த்தலில் நாம் காட்ட வேண்டிய அக்கறையையும் விரைவையும் விளக்கியிருக்கிறார். பின்னர் சட்ட திட்ட திருத்தமும் தீர்மானங்களும் நிறைவேறியுள்ளன.

வளர்ந்து வரும் இயக்கத்திற்கொரு வேலி போன்றது சட்ட திட்டம். அதனைக் கழகத்தின் வளர்ச்சிக்கேற்பத் திருத்தியிருக்கின்றனர். அத்திருத்தங்களைப் பொதுக் குழு ஒரே முகமாக ஏற்றிருக்கிறது. மிகவும் மகிழத்தக்க செய்தி, இது. புதிய திருத்தங்களின்படி, கழகம் மேலும் தீவிரமாகவும் கட்டுப்பாடாகவும் செயல்பட்டு, வெற்றியையடையப் பல வாய்ப்புக்கள் உள.

அடுத்து, தீர்மானங்கள் ஏழு நிறைவேறியுள்ளன. முதலாவது தீர்மானம் மறைந்த டாக்டர் தருமாம்பாள் அம்மையாரின் இழப்பிற்கு வருந்தி மரியாதை செய்கிறது. அடுத்த தீர்மானம் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் தி. மு. க. கலந்துகொள்வதாகும். ஏற்கனவே இத்தொகுதியில் இருந்துவந்த உறுப்பினர் சாமி சகஜானந்தா வென்றாரென்றால் அது அவரது தனித் திறமையாலாகும். காங்கிரசார் என்பதைவிட அவர் தன் சுயபலத்தால் வென்றார் என்பது பொருந்தும். அத்தோடு இப்போது அவ்வளவு அறிமுகமான பொதுநல ஊழியர் காங்கிரசில் யாரும் இல்லை! அடுத்ததாக அப்பகுதியில் கடந்த பொதுத் தேர்தலுக்குப்பின் நம் கழகம் புது வலிவு பெற்றிருக்கிறது; உழவரிடை நம் குரல் ஓங்கியிருக்கிறது; பஞ்சாயத்துத் தேர்தல்களிலும் நம் தோழர்கள் நல்ல வெற்றியை ஈட்டியிருக்கின்றனர். இவற்றையெல்லாம் நோக்க நாம் முனைந்து முயன்றால் வெற்றி நமக்கே என்பது தெளிவாகிறது.

அடுத்த தீர்மானம், கேரளத்தில் காங்கிரசார் ஆடும் ஆட்டம் பற்றியது. மறு தேர்தல் வேண்டுமென்கின்றனர் காங்கிரசார். பொதுவுடைமையர் ஆட்சியை எப்படியும் கவிழ்த்திவிடுவது என்று துடித்து, வெறிபிடித்தலைகின்றனர். இச்செயல்கள் வாக்காளர்களின் தீர்ப்பைப் பெரிதும் அவமதிப்பதும் மக்களாட்சிப் பண்பைச் சீர்குலையச் செய்யும் இழிசெயல் புரிவதுமாகும் எனப் பொதுக்குழுவின் தீர்மானம் கூறுகிறது இதை இனியேனும் உணர்ந்து காங்கிரசார் அவ்வழிப்படுவரா?

மற்றொரு தீர்மானம் வானொலி என்ற தேனொலியிருக்க, வேறு பாழொலி நம்மிடை ஒலிப்பதைக் கண்டிப்பதாகும். அடுத்து சென்னை அரசினர் பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பதை உறுதியாகக் கண்டிக்கிறது; அதோடு சென்னைபோன்று மற்ற இடங்களிலும் பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கிப் பயன்பெற அரசினர்க்கு அறிவுறுத்துகிறது.

மற்ற இரு தீர்மானங்களும் உருவெடுக்கவிருக்கும் பெரும் போராட்டம் பற்றியதாகும். "நாட்டை அடிமைப்படுத்த வேண்டுமெனின், நாசமாக்கிவிடு அதன் மொழியை!" என்பது அரசியல் சூதாட்டக்காரர்களின் வெறிக் கொள்கையாயிருந்து வருகிறது. நாமறிவோம் வடநாட்டார் அதை உயிராய்-மூச்சாய்க் கருதிச் செயல்பட்டு வருவதை. நாம் அடிக்கடி சுட்டிக்காட்டியிருக்கிறோம், அது இங்குப் பரப்பப்படும் தீய வழிகளை. இந்தியைப் பரப்புவதன்மூலமாக வடஇந்திய ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டத் துடிக்கின்றனர். ஆயிரம் முறை எடுத்துச்சொல்லியும், பல்லாயிரவர் நம்மவர் சிறைங்கேகியும், இளமை கொஞ்சும் இன்பவாழ்வினர் பலர் தம் இன்னுயிரை ஈந்தும் இந்தியின் கோரப்பசி அடங்கவில்லை! கொக்கரித்துக் கிளம்புகிறது, இன்னும்! ஆண்டு சிலவற்றிற்குள்ளாக அனைத்திந்தியாவிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளத் துடிக்கிறது. ஆவேசத்தையும் இளமைரத்தத்தின் கொதிப்பையும் நம்மிடையே எழுப்புகிறது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது போதும்! துணைக்கண்டத்தின் நான்கில் ஒரு பகுதியினர்கூடப் பேசாத மொழிக்குத் துணைக்கண்டம் முழுமையிலும் ஆதிக்கமா? தூய அறிவுடையோரும், துடிப்பு நிறைந்தோரும், இளமை செறிந்தோரும் ஆன நாம் இதைக் கண்டித்துக் கொண்டிருந்தோம், எதிர்க்குக் காலம் கொடுப்பதற்காக. பகை முழு உருவில் எழுந்துவிட்டது. திராவிடமெங்கிலும் திரண்டு நிற்கும் சிங்கஇளைஞரே! எஃகுநெஞ்சினரே! கழகக்காளையரே! எழுமின்! எழுமின்! அணிவகுத்திடுமின்! அவரவர்க்கு ஏற்ற படைக்கருவி ஏந்திடுமின்! நம் வலிவைப் பழிக்கும் வடக்கத்தியாரின் பிடரியிலடிக்க வம்மின்! வம்மின்! கழகத்தின் ஆணை காதுகளிலே விழ இன்னும் ஒருநாளோ? இருநாளோ? விரைவில் வரவிருக்கிறது கழகத்தின் ஆணை! கருத்துக் கணை-வில் எடுப்பீர்! கயமை நிறை இந்திப்பகையின் உயிர்குடிப்பீர்!

ஆம்! இவைதான் மாயூரம் பொதுக்குழு காட்டும் இலட்சிய விளக்கங்கள்!

★

திருத்தம்

இவ்விதழ் 11-ம் பக்கத்தில் உள்ள மதுரை எழுத்தாளர் மன்றச் செய்தியின் தலைப்பு, சில இதழ்களில் மதுரை **எழுதாளர்** *மன்றம் என்று தவறாக அச்சாகிவிட்டது. வாசகர்கள் அதை* **மதுரை எழுத்தாளர் மன்றம்** *எனத் திருத்தி வாசித்துக்கொள்க.*

தென்றல் நண்பர்களுக்கு!

★

பல வாசக நண்பர்களும், செய்தித்தாள் விற்பனையாளர்களும் "தென்ற"லும் "தென்றல் திரை" எனும் ஏடும் ஒரே நிறுவனத்தில் இருந்து வருவதாகத் தவறாகக் கருதி, "தென்றல் திரை" பற்றியவற்றை அறிய நம் முகவரிக்கு வருகின்றனர். சிலர் "தென்றல் திரை" பற்றிய விவரங்களை நம்மிடம் வந்து கேட்கின்றனர்.

"தென்ற"லுக்கும் "தென்றல் திரைக்கும் கொள்கை வழியுட்பட எவ்வழித் தொடர்பும் இல்லை. இரண்டும் வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து வெளி வருகின்றன எனத் தெரிவித்துக்கொள்கிறோம். விற்பனையாளர்களும் பிற நண்பர்களும் "தென்றல்" பற்றிய தொடர்புகளை மட்டும் எம்மிடம் கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை-6,
18-7-59.

பொறுப்பாளர்,
"தென்றல்".

பேரழகு பொழியும் கேரளத்து மண்ணில்,

தம்பியின் மடல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்ணியம் காத்திருக்கும் காவலரே, அறிஞர் அண்ணா அவர்களே! அன்புக் கடிதம் அனுப்பிக் கடமையைச் செய்கிறேன். பத்தாண்டுக்கால உழைப்பிற்குப் பலன் கண்ட பாட்டாளிகளாக நாம் இருக்கும் வேளையில் கேரளத்திலேயிருந்து இந்த மடல் விடுக்கிறேன். கேரளம் புயலடித்த பூங்காவாகிவிட்டது. எழில் கொழிக்கும் தாயகம் எத்தர்களின் கூடாரமாகிவிட்டது. மத வெறியர்களும் ஆதிக்கப் பித்தர்களும் கேரள மக்களைப் பிணங்களாக்கி மகிழ்கிறார்கள். மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருகிறது. வண்டிப்பெரியார் வட்டாரத்திலும், தலை நகரான திருவனந்தபுரப் பகுதியிலும், பாலக்காடு மாவட்டத்திலும் நம் குரல் ஒலித்து வருகிறது. கேரளத்து மக்களின் இதய நாடிகளை நம் இலட்சியம் இறுகப் பிடித்துப் படை திரட்டிடும் வலிவு பெற்றுள்ளது. எங்களைப்பற்றிய செய்திகளைச் சொல்கிறேன். செவி மடுப்பீராக! கழகத்தின் மேன்மையினால், இலட்சியத்தின் பெருமையினால் நீங்களும் உங்கள் இதயம் பேசும் மொழியை முற்றுமுணர்ந்த என்போன்ற தம்பிகளும் திராவிடத்திலே அரசியல் சபலங்களால் பலப்பல கட்சிகள் மக்கள் மன்றத்திலே மதிப்பிழந்திருக்கும் வேளையில் முன்னேற்றக் கழகத்தை நீல வானத்து முழு நிலாவாக, உள்ளம் மகிழ்விக்கும் உயிரோவியமாக, கண்டார் களிப்புறும் கலைப்பூங்காவாக அறிவு முகாமாக வளர்த்திட்டோம். நமது பத்தாண்டுப் பயணத்தில் நம்மை நமது கழகத்தின் அரசியல் வளர்ச்சியைத் தடைகளால், தகாத செயல்களால் கலைத்துவிடலாம் என்று கனவு கண்டவர்கள் ஏராளம்! நம் வளர்ச்சி திராவிட இனத்திலே புத்துணர்வு கொண்டோர், புகழுக்கும் புகழ் தரும் புதிய பதவிக்கும் மனதைப் பறி கொடுக்கும் மனப்பான்மையற்றோர், திராவிடத்தின் விடுதலை ஆர்வம் மிக்கோர், 'நாம் பிறந்த பொன்னாட்டுக்கு நம் வாழ்நாளில் நல்லது செய்வோம்' என்ற நல்லெண்ணம் படைத்தோர், 'எங்கள் இனம் திராவிட இனம். உலகுக்கு நாகரிகப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்த இனம். இனியும் தாழ்ந்திருக்கவிடோம், அதை. அந்தத் தீங்கை ஒழித்திடப் பச்சை ரத்தம் பரிமாறி விடுவோம்' எனப் பண்ணிசைக்கும் இலட்சிய வாதிகள், ஆகியவர்களின் உழைப்பினாலே உரம் பெற்றுத் திளைக்கிறது.

'மாற்றுக் கட்சித் தோழனே! அரசியல் நெறி உணரா அன்பனே! எங்கள் கழகத்தை முற்றிலும் புரிந்து கொள்ளாத வீரனே! கத்தி ஏந்திக் கொண்டு, கழி சுற்றிக்கொண்டு, கல் எடுத்துக்கொண்டு எங்களை எதிர்க்காதே–நாங்கள் இவைகளுக்குத் தந்திருக்கும் இரத்த உணவு கொஞ்சமல்ல. இருந்தாலும் இலட்சியப் பயணத்திலே, அதற்கான கொள்கை பணியிலே யாருக்கும் இளைத்தவர்கள் அல்ல. காரணம் எங்கள் செல்வம் நாங்கள் பெற்றிருக்கிற வழிகாட்டி. விடுதலைப் படையின் தலைவன் பத்தாண்டுக் காலமாகத் திராவிடமெங்கும் உள்ள அத்தனை மக்களின் இதயத்திலும் அறிவுச் சுடர் கொளுத்தி, தானும் ஒரு ஒளியாக–அணையாத பேரொளியாக, மற்ற மற்ற அரசியல் தலைவர்களுக்கெல்லாம் கண்ணியம் கற்றுக் கொடுக்கும் காவலராக, தன் சொல்லால் செந்தமிழ்க்கின்பம் தேடிக்கொடுத்து எங்களையும் செம்மைப்படுத்தியவராக உள்ள எம் அறிஞர் அண்ணா அவர்கள் எங்களிடத்திலேதான் இருக்கிறார். அவர் அடிக்கடி சொல்கிறாரே அந்தப் பொன்மொழி அது தெரியுமா உனக்கு? 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பது அது அதுதானப்பா எங்களையெல்லாம் உங்கள் போன்றாரின் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளச் செய்கிறது. எங்களிடத்திலேயுள்ளது உயிர். அதைத்தானே எங்கள் வேலாயுதங்களும் பாண்டியன்களும் மஜீத்களும், அன்பு மனைவி அழகு மக்கள்–அணையும் விளக்கென இலங்கும் அன்னையர் – வேறு துணையே இல்லாத இல்லத்தவர் எல்லோரையும் தவிக்கவிட்டு உங்களுக்கு இரையாகியிருக்கிறார்கள். அதற்கான மூலபலம், மாணவ உலகினரை மறுமலர்ச்சியின் தூதுவர்களாக்கி, கல்லூரிகளைப் பகுத்தறிவுப் பாசறைகளாக்கி, கலையுலகை நாட்டு மக்களின் நிலையும் நினைப்பும் தவழும் புத்துலகமாக்கி, தன்னுடைய புதிய பாதையிலே அறிவுப் பாதையிலே அரசியல் பாதையிலே லட்சக் கணக்கில் பெருந்தகையாளரைச் சேர்த்திருக்கிற அறிஞர் அண்ணா அவர்களிடத்திலேதான் அமைந்துள்ளது. அந்த எளிய உருவத்தின் நா அசைந்தால், இந்த நாடே அசைகிறது. அவரும் அவர் உருவாக்கிவிட்ட நாவலரும் சொல்லின் செல்வர்களும் கலைஞரும் கவிஞரும் படை நடத்துவோராக இருக்கும் வரை எங்கள் பயணம் துவளாது. அதனைத் துண்டிக்கவும் இயலாது. இதனை இனியாவது நீங்கள் உணருங்கள். அதன் பின்புதான் எங்கள் பாதைக்கு நீங்களும் வருவீர்கள்'' என்றெல்லாம் பேசும் துணிவு கொண்ட கொள்கைக் கோமான்கள் நிறைந்தது, நம் கழகம் அண்ணா!

இந்தப் பத்தாண்டுக் காலத்தில்–கண்ணீரைத் துடைத்துக்கொண்ட அந்தச் செப்டம்பர் 17-1949-ல் நாம் நம் முன்னேற்றக் கழகத்தைப் பெற்றபோது எடுத்துக்கொண்ட சபதங்களையெல்லாம் நல்வழி வழுவாது செயலில் காட்டியிருக்கிறோம். நாம் பிறந்து வளர்ந்து குறுநடை போட்டிருந்த காலத்தில் எல்லாம் எவ்வளவு எதிர்ப்புகளை எடுத்தெடுத்து எறிந்தார்கள். அவர்கள் அப்பாவிகள்–உங்களையும் உங்களுடைய கட்டளைக்குக் காத்திருக்கும் கணக்கற்ற காளையரையும் உள்ளது உள்ளபடியே உணரமுடியாதவர்கள்; உணர முயலாதவர்கள். நாங்கள் இந்த உண்மையை உணர்ந்திருக்கிற காரணத்தால் பக்கத்து வீட்டுக்காரன், எதிர் வீட்டுக்காரன், தெருவிலே பெரிய மனிதன், ஊருக்கே தலைவன் என்ற பெயருக்குரியவர்களெல்லாம் நம் கழகத் தொண்டர்களை எவ்வளவு கேவலப்படுத்தினாலும் தலைவர்களைத் தரம் தாழ்த்தி மற்ற தலைவர்கள் சொன்னாலும் பொறுத்துக்கொள்கிறோம்! எத்தனையோ கொடுமையான நிகழ்ச்சிகள் தினம் தினம்—இடத்திற்கிடம், கிராமம் கிராமமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன; நடத்தப்படுகின்றன மாற்றார்களால்! அவைகளையெல்லாம் உங்களுக்குச் சொல்லி, எதிர்காலத்தில் நம் தாயகத்திற்குப் புகழ் தேடித் தர நினைப்பையெல்லாம் தந்திருக்கும் தங்களைப் புண்படுத்தவில்லை நாங்கள்! உங்களின் அறிவு மொழி காட்டும் வழியிலே துன்பங்களைத் தாங்கிக் கொண்டுதான் எங்கள் பணியைச் செய்துகொண்டிருக்கிறோம். ஏடுகளிலே விளம்பரம் பெறாதவர்கள், மாநாடுகளிலே அறிமுகமில்லாதவர்கள், தலைமை நிலையத்தோடும் அறிவகத்தின் கழக முன்னணியார்களிடத்திலும் அதிகத் தொடர்பில்லாதவர்கள்–ஏன் தொடர்பு கொள்ளமுடியாதவர்கள்–ஆனால் வாழ்க்கைப் பாதையில் சிறு அங்க அசைவையும் இயக்கத்துக்காக ஒதுக்கி வைத்திருப்பவர்கள்–ஆயிரக்கணக்கிலே ஊருக்கு ஊர் இருக்கிறார்கள். அண்ணா! தமிழகத்தின் பெரும் பகுதியிலும், ஆந்திரத்திலும் கன்னடத்திலும் இந்த எங்கள் கேரளப் பகுதியிலும் தொல்லைகளையெல்லாம் இயக்கத்தின் சார்பில் பெற்றுக்கொள்ளும் உயர் பரிசுகளாக எண்ணி மகிழ்ந்திடும் தோழர்கள் அனைவரும் திராவிடத் தனியரசு வேண்டுபவர்கள். அந்த இலட்சிய வெற்றிக்குப் பாதை அமைப்பவர்கள்! கேரளத்துத் தோட்டத் தொழிலாளர்–பாட்டாளிப் படை வரிசையினர், முன்னேற்றக் கழகத்தின் முழு நேர உழைப்பாளிகள். திராவிடத் திருநாட்டின் பெருமைக்காக முரசொலித்துக் கொடியேந்தியிருப்பவர்கள்! எங்கள் வளர்ச்சியை, எங்கள் ஆற்றலை, எங்கள் விடுதலைப் பட்டாளத்தின் பெரியதோர் அணிவகுப்பை நீங்கள் இங்கே வந்தபோது கண்டீர்களே! அண்ணா! நாவலரும் நம் கலைஞரும் எங்களைச் சந்தித்தபோது பூரித்துப் போனார்களே, கழகத்தின் பெருமிதம் கண்டு! நம் கழகத்தின் காலடிச் சுவடுகள் கேரள மண்ணிலே அழுத்தமாகப் பதிந்து வருகின்றன. நம் இலட்சியப் பணிக்குப் படை தயார்; தடை செய்வோர் எவருமில்லையே! இந்த நிலைக்கு நாங்கள் தந்திருக்கிற உழைப்பு–செங்கொடியாளர்களும் மூவர்ணக்காரரும் எங்களுக்குத் தந்துள்ள தொல்லைகள்–வேதனைகள், இந்த மடலில் சொல்லக் கூடியன அல்ல அண்ணா! தொண்டை நீர்வற்றக் கத்திக் கத்திதான் அண்ணா இங்கே நம் முகாமை வலுப்படுத்த முடிந்தது! முன்னேற்றக் கழகம் வளர்ந்தது!

திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தப் பகுதி மக்களிடையே அவர்தம் இதயத்திலே இடம்பெறச்செய்ய, தொழிலாளர் உழைப்பிலே கட்சியை வளர்த்துக்கொண்டிருக்கும் கோணங்கித் தோழர்களிடத்திலே நாங்கள் வாங்கியுள்ள சொல்லடிகளும் கல்லடிகளும் கணக்குக் காட்டமுடியாத பெருந்தொகையிலே உள்ளன! தம்பி துன்பப்பட்டியலை மிக மிக நீளமாக்கிவிட்டானே என்று எண்ண வேண்டாம் அண்ணா–எண்ணமாட்டீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு! தொழிலாளர் நிலை உயர அவர்களின் வாழ்வுச்சுமை பழுவேறிப் பெருகினாலும், தோட்டத்துச் சீமான்கள் – உரிமையாளர்கள் உணர மறுக்கிறார்கள். கனிவுள்ளம் காட்டுவதற்குப் பதிலாக கங்காணிகளை வைத்து மிரட்டுகிறார்கள், கழகத் தொடர்புகொண்டால் கண்டிக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றிபெற–மீண்டும் உரிமை பெற்றுத் தர, நம் கழகம் தயாராக இருக்கவேண்டும் அண்ணா! அதற்கென ஒரு தனி அமைப்பு பொதுச்செயலாளர் பொறுப்பிலே மிக மிக அவசியமாகவும் அவசரமாகவும் தேவை! எங்கள் அன்புச் செல்வமே! மாற்றார் மனதிலும் மங்காத புகழ் பெற்றிருக்கும் எம் காஞ்சித்தலைவரே! கழகக்குரல் ஒலிக்கும் தொழிலாளர்களின் குரல்வளை நெறிக்கப்படுகிறது. வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். கேரளத்தில் மட்டுமல்ல; தமிழகத்திலும்கூடத்தான்! இந்த அநீதி துடைக்கச் சிறந்ததோர் முடிவினை, கழகத்தின் உயிர்ப்பிரச்னையாக மதித்துப் பொதுக்குழு செயலாற்றத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறோம்! முன்னேற்றக் கழகத்தின் முழு வளர்ச்சிக்கும் கேரளத்துப் பாட்டாளிகளிடம் ஆதரவுண்டு. மலைத்தோட்டங்களில் களிறுகளின் முழக்கம் கேட்பதுபோல ஒவ்வொரு மலை முகட்டிலும் கொள்கைக்குரல் கேட்கிறது. திசைப்பூட்டும் இடங்களில் எல்லாம் கொடி பறக்கிறது. கேரளம் பலப்பல அரசியல் வேட்டைக்காரர்களை நம்பிப் பலகாலம் ஏமாந்துவிட்டது. காங்கிரஸ்காரர்களும் மன்னர்களின் வாரிசுகளும் பட்டம் தானுக்களின் பரிவாரங்களும் கேரளமக்களை அவர்களின்

— 9-ம் பக்கம் —

பேசுவதும் நம் இதழே; பாடுவதும் நம் குரலே!

பெயின்

நாட்டிற்காக உயிர் உடல் ஈந்த நல்லவர்கள், அரசியல் கருத்துக்களின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த அரசியல் விற்பன்னர்கள், மனிதகுலம் வாழ்வதற்காக மாபெரும் உண்மைகளையும் தத்துவங்களையும் உலகிற்கு அளித்த உத்தமர்கள் ஆய இவர்களின் வாழ்க்கை வரலாறுகள் எதிர்கால மனிதர்களின் கண்களுக்கு இருள்சூழ்ந்த மாளிகைகளாகத் தென்படுகின்றனவே-அது ஏன் என்று இன்றுவரை எவரும் வினு எழுப்பாமலில்லை. அந்தக் கேள்விக்குச் சரியான பதில் இன்றுவரை கொடுக்கப் படவில்லை என்பதே சரித்திரம் காட்டும் உண்மை. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது நமக்கு மட்டும் சொந்தமான ஒரு மொழி அல்ல. அது காலத்தின் வேகத்தில் தோன்றிய அனுபவத்தின் முதிர்ச்சி என்பதாகவே எல்லா நாடுகளிலும் வழங்கப்படுகிறது. பழமையின் உருவங்களைப் புதுமைப் பொலிவுகளாக்கக் கிளம்பிய சீர்திருத்தச் செம்மல்களை எல்லா நாடுகளும் தலைவணங்கத்தான் செய்கின்றன. தனி அரசியல் துறையில் மட்டும் தன் கவனத்தைச் செலுத்துபவனின் மனதில் நிச்சயம் பதவி மோகத்திற்கு இடமிருக்கும். சமுதாயத்தை மறந்து திரிந்து அலையும் அவன் மனம் அமைதியுற வழியேயில்லை. ஏனென்றால் பதவியே அவனது குறிக்கோள். ஆனால் கோழைக் கொள்கைகளும் கண்மூடிப்பழக்கங்களும் அறிவுச்சூன்யங்களும் ஆட்சி செலுத்துகின்ற சமுதாயத்தை சீர்திருத்திவிட்டுப் பிறகு அரசியலில் தன் காலைப் பதிய வைக்கின்ற ஆற்றல் பெற்றவன் உண்மையிலே போற்றுதற்குரியவனாகிறான். அப்படி அவன் அரசியல் சமுதாயம் ஆகிய இரண்டு துறைகளிலேயும் தன் பார்வையைத் திருப்பி, "சமுதாயம் முன்னேற வேண்டும்-அதன்மூலம் நாம் சிறந்ததொரு அரசியலமைப்பைப் பெறமுடியும்" என்று ஒருவன் நினைத்ததின் பயனாகத்தான் இன்று இலட்சோப இலட்ச மக்களின் இதயத்தில் வீற்றிருக்கிறான், அவன். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற எம் தலைவன். பகுத்தறிவுப் பாசறை நமக்கு பகுத்தறிவை ஊட்டியதனால் நமது அண்ணா இன்று நல்லதொரு இடத்தில் வீற்றிருக்கிறார். ஆனாலும் ஆற்றல் மிக்கோருக்கு அடிக்கடி வரும் எதிர்ப்புக்களை அண்ணா அறிந்து தனது தனித் திறமைமூலம் கல்லெறிந்தோரையும் சுடுசொல் வீசியவர்களையும், தம் பக்கம் இழுத்துவிட்டார். ஆனால் அன்றையதினம் ஐரோப்பாக் கண்டத்தில் தோன்றிய ஹஸ், எராஸ்மூஸ், விக்ளிப், லூதர், ரூசோ, வால்டேர் போன்ற அறிவின் தூதுவர்கள் இந்தத் தனித்திறமை இல்லாத காரணத்தால் எதிர்த்தவர்களைத் தம் பக்கம் இழுக்கும் வலிமையற்றுத் தங்கள் கதைகளை வறுமை என்னும் பேனாவினால் துன்பம் என்னும் மைகொண்டு எழுதிக்கொண்டார்கள். சுமார் 150 ஆண்டுகளுக்குமுன்பு அதாவது கி. பி. 1809-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந்தேதி மடிந்தானே, ஒரு மாபெரும் அரசியல் அறிஞன் - அவன் டாம் பெயின் தனது அரசியல் வாழ்க்கையோடு சமுதாயச் சீர்திருத்தத்தையும் ஒரு அங்கமாகக் கருதி வாழ்ந்து வந்தவன்.

வறுமை மிகுந்த பெற்றோர்களுக்குப் பிள்ளையாக பிறந்த ஒரே காரணத்தினால் தனது 19 வது வயதிலே வீட்டைவிட்டுவெளியேறி ஒரு மாலுமியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிறிது நாட்கள் கழித்து லண்டன்நகரிலே அரசாங்க ஊழியனாகச்சிலகாலம் வேலை பார்த்தான். வேலை செய்த இடத்தில் உண்மையை உண்மை என்று கூறிய காரணத்தால் அரசாங்கத்தாரால் 'புரட்சிக்காரன்' என்று குற்றம் சாட்டப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டான். சீர்திருத்தக் கருத்துக்களையும் முற்போக்கு எண்ணங்களையும் சிந்திக்கொண்டே இருந்த அவன் குடும்ப வாழ்க்கையில்கூடப் பெரும் புயல் வீசியது. அவனுடைய முதல் மனைவி திருமணமான ஒரு வருடத்திற்குள் மாண்டு போனாள். அவனது இரண்டாம் மனைவி திருமணமான மூன்று வருடத்திற்குள் பிரிந்து போய்விட்டாள். ஏமாற்றமும் அமைதியின்மையும் அவனது வறுமையோடு போட்டி போட்டன. கடன்காரர்களின் நெருக்கடியைச் சகிக்கமுடியாமல் 'பொது வாழ்வில் என்று இறங்கினேனோ அன்று எனக்கென்று எதுவும் இல்லை' என்ற கூற்றுப்படி தன் உடைமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு வறுமையற்ற வாழ்விற்காக எங்கெங்கோ ஓடினான். நாடோடிபோல் அலைந்தான். 'உயிர் காப்பான் தோழன்' என்பது அவன் விவகாரத்தில் உண்மை. ஆருயிர் நண்பர்களின் உதவியால் தனது வாழ்வை இழுத்துக்கொண்ட பெயின் லண்டனில் இருந்து அமெரிக்காவுக்குச் சென்றான். சொந்த நாட்டில் புரட்சிக்காரன் எனப் பெயர் பெற்றவன் வெளிநாட்டில் விவேகி என்றும் விற்பன்னன் என்றும் பெயர் பெறுவது ஆச்சரியமல்ல. 'பெனிசில்வேனியா மேகசின்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியனாக அமர்த்தப்பட்டான். புகழேணியின் அடிவாரத்தில் இதன்மூலம் கால்வைத்த பெயின் 1776-ம் ஆண்டு ஜனவரி மாதம் 'பகுத்தறிவு' என்ற புத்தகத்தின் மூலம் புகழேணியின் உச்சிக்கே சென்றுவிட்டான். "என்னுடைய 'பகுத்தறிவு' இவ்வளவு கீர்த்தியையும் செல்வாக்கையும் கொண்டுவரும் என்று நானே எதிர்பார்க்கவில்லை" என்று பெயின் கூறுகிறான். மனிதனுடைய சிந்தனையில் ஒரு மகத்தான மாற்றத்தை உண்டு பண்ணுகிறது 'பகுத்தறிவு' என்று ஜார்ஜ் வாஷிங்டனே புகழ்ந்து பாராட்டினார். இந்தச் சமயத்தில்தான் பிரிட்டனின் காலனியாக, ஏகாதிபத்தியத்திற்கு எடுபிடியாக இருந்த அமெரிக்கா தனது உரிமைக்குரலை ஓயாமல் எழுப்பியதின் விளைவு அமெரிக்க சுதந்திரப்போர் மூண்டது. அதே ஆண்டு அதாவது 1775-ம் ஆண்டு அமெரிக்கா பிரிட்டனின் கோரப்பிடியிலிருந்து விடுபட்டு விடுதலை பெற்றது. பெயின் அமெரிக்க மக்களின் கிளர்ச்சிக்கு ஆதரவாகத் தனது பேனாவைத் திருப்பினார். கட்டுரைகள் பல தீட்டி ஆதிக்கவெறியர்களைக் கண்டித்தார். அமெரிக்க விடுதலைப்போர் முடிந்ததும் பெயின் வேலையும் முடிந்துவிட்டது. 1785-ம் ஆண்டு அமெரிக்க விடுதலைப் போரில் பெயின் ஆற்றிய பணிக்காக காங்கிரஸ் என்று அழைக்கப்படுகிற அமெரிக்க சட்டமன்றம் 3000 டாலர் பரிசளித்து மகிழ்ந்தது. நியூயார்க் நகரம் 300 ஏக்கர் நிலப்பரப்பை பெயினுக்கு அளித்துப் பூரித்தது. ஆனால் பெயின் தனது கடமை முடிந்துவிட்டது என்று கருதாமல் பிரெஞ்சு நாட்டுக்கு வாழ்வளிக்க கி. பி. 1787-ம் ஆண்டு தனது 12 வருட அமெரிக்க அரசியல் அனுபவத்துடன் பிரான்சுக்குக் கப்பலேறினார். இந்தச் சமயத்தில்தான் பிரான்ஸ் மக்கள் தங்களை ஒரு மாபெரும் இரத்தப்புரட்சிக்குத் தயார் செய்துகொண்டிருந்தனர். குழப்பமும், கொந்தளிப்பும் பிரான்சில் குடியேறி, பிரபுக்களின் கோலோகல தர்பாருக்கும் மன்னனின் சர்வாதிகார போக்கிற்கும் முற்றுப்புள்ளி வைக்கத் துடிதுடித்துக்கொண்டிருந்த நேரம் அது கி. பி. 1789-ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி ஆரம்பமானது. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்த எத்தர்களும், பல்வகை மலர்தூவிய மெல்லிய பஞ்சணையிலே பிறப்புமுதல் இறப்புவரை உருண்டு கொழுத்த உல்லாசிகளும், சிங்காரப் பைங்கிளிகளின் சிற்றின்ப ரசத்தை சித்தம் கலங்கப் பருகின சீமான்களும், போக போக்கியத்தில் புரண்டெழுந்து நாயினும் கீழாய் நலிபவனை கொடுமைக்காளாக்கிய அந்தப் பூமான்களும் ஓடி ஒளிந்தனர், இருக்க இடம் தேடி. புரட்சி எரிமலையின் கனலைச் சகிக்க முடியாமல் தவித்தனர். ஆரம்பத்தில் அகிம்சா முறையில் ஆரம்பமான புரட்சி விரைவில் பலாத்காரத்தைத் தழுவ ஆரம்பித்தது. இங்கிலாந்து நாட்டு அரசியல் அறிஞன் எட்மண்ட் பர்க் புரட்சிக்கு எதிராக எழுதிக் குவித்தான். நொந்துபோன உள்ளங்களின் வேதனைக்குரலை அறிந்துகொள்ளமுடியாத பழைமை விரும்பி பர்க். ஊராள்வோனின் கொடுமையால் உரிமையிழந்த மக்களின் உள்ளத்து உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ளமுடியாத பர்க், எதிர்த்துப் பேசமுடியாத அந்த ஏழைமக்களின் இன்னல்களைக் கற்பனைகூட செய்து பார்க்கமுடியாத பர்க், "புரட்சிக்கு ஆதரவளிக்கக்கூடாது இங்கிலாந்து மக்கள்" என்று தன் "பிரெஞ்சுப் புரட்சியின் பிரதிபலிப்புக்கள்" என்ற புத்தகத்தில் எழுதினான். புரட்சி என்பது படிப்படியான ஒரு அமைதியான முறையிலே ஏற்படுகிற மாற்றம் என விளக்கம்கொடுத்தான். சோறு தேடி அலைபவனிடம் தத்துவம் பேசிய கதையாகத்தான் பிரான்சு தேசத்து மக்களுக்கு அவன் அறிவுரைபட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் 'மனிதனின் உரிமை' என்ற ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டுப் பிரஞ்சுப் புரட்சிக்கு ஆதரவு கொடுத்தான் பெயின். 'மனிதனின் உரிமை' என்ற அந்த நூல் பெயினின் கீர்த்தியை ஒருபடி உயர்த்திற்று. தனது நாட்டைச் சேர்ந்த பர்க் கொள்கைகளுக்கு விரோதமாக, பிரெஞ்சுப் புரட்சிக்கு ஆதரவாக, பெயின் புத்தகம் எழுதிவிட்டானே என்று ஆத்திரமடைந்த பிரிட்டன் மக்கள், பெயின் போன்று உருவங்களை செய்து அவைகளை நகரமெங்கும் எரித்தனர். பெயின் இங்கிலாந்து நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டார் என்று சட்டபூர்வாக அறிவிக்கப்பட்டது. பிரான்சில் இருந்த பெயின் புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டிய பிரெஞ்சு மக்கள்மீது மாபெரும் நம்பிக்கை வைத்திருந்தார். தன்னுடைய 'மனிதனின் உரிமையை' வரவேற்ற பிரெஞ்சு மக்கள் தன்னையும் வரவேற்பார்கள் என்று தப்புக் கணக்கு போட்டார். பிரெஞ்சுக்காரனின் அடிப்படைக் குணத்தை பெயின் அறிந்துகொள்ள முடியவில்லை. மன்னனுக்கு விரோதமாக எழுந்த பிரான்ஸ் மக்கள் புரட்சிக்குப் பின் நெப்போலியனை, சக்கரவர்த்தியாகக் கொண்டாடினர். மன்னனுக்கு விரோதமாகப் புரட்சிக் காலத்தில் எழுதியதற்காக, பெயின் பிரான்சில் சிறைப்படுத்தப்பட்டார். பெயின் நூலைப்பற்றி பிரமாதமாகப் புகழ்ந்து பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் பெயின் சிறையில் இருப்பதை அறிந்தும் அறியாதவர்போல் இருந்துவிட்டார். இங்கிலாந்தோ நாடு கடத்திவிட்டது; நண்பர்களோ நச்சுப் பாம்புகளாக மாறிவிட்டனர். வாஷிங்டனின் இந்தச் செயல் பெயின் உள்ளத்தில் ஆறாத புண் ஒன்றை ஏற்படுத்திவிட்டது. 'நன்றி கெட்டவன்' வாஷிங்டன் என்று சொல்லிக்கொண்டே இருந்தான் பெயின். சிறையில் இருக்கும்பொழுது 'பகுத்தறிவின் காலம்' என்ற புத்தகத்தை எழுதி முடித்தான் பெயின். தனது சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை இந்தப் புத்தகத்தில் தெற்றென விளக்குகிறான். "ஒருவனே தேவன் என்பதுதான் என் கடவுட் கொள்கை!" என்ற அவனது வார்த்தைகளை வைத்துக்கொண்டு மதத்திற்கு விரோதமாக எழுதப்பட்ட புத்தகம் என்று மதவாதிகள் மக்களை அவனுக்கு விரோதமாகத் திருப்பினர். நாத்திகன் பெயின் என்று நாடே முழங்கும்படி மதவாதிகள் பக்குவமாக வேலை செய்தனர். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவற்றுடன் அமெரிக்காவும் சேர்ந்துகொண்டு இழிமொழிகளையும் ஏசலையும் பரிசாகத் தந்தது. அமெரிக்கா திரும்பிய பெயின் அமெரிக்க மக்களும், தன்னை வெறுப்பதை உணர்ந்துகொண்டார். துன்பச் சூறாவளியும், வறுமைப் பேயும், நாட்டுமக்களின் நன்றி கெட்ட தன்மையும் அவரை அனாதையாகவே சாகடித்துவிட்டன. நன்றி கெட்ட மக்களின் உள்ளத்தை புரிந்துகொள்ள முடியாமலே வறுமை என்னும் தோழனோடு மாண்டு போனார்.

— பெஸ்கி எம். ஏ.

மனம் கவரும் குடும்பக் கதை!

மா. கி. தசரதன் எம். ஏ.

எழுதிய

"தணலில் தங்கம்"

விற்பனை உரிமை:

"தென்றல்", சென்னை-6.

தனிப் பிரதி ரூ. 1-50.

தபால் செலவுடன் ரூ. 1-60.

விற்பனையாளருக்குக் கழிவு 20%.

தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக

5. பொருளியலின் சிறப்பு.

இராம. இராமநாதன் பி. ஏ. (ஆனர்ஸ்).

தொல்காப்பியர் அகத்திணையியல், களவியல், கற்பியல் என்று மூன்று பிரிவுகளில் காதலர் வாழ்வியலைக் கூறியும் அமையாது "பொருளியல்" என்ற ஒன்றையும் எடுத்துக் கூறுகிறார். இது ஏன் தனியாகக் கூறப் பெற்றது? மூன்று பெரும் பிரிவுகளில் கூறியது போக எஞ்சியவற்றை இவ்வியலில் எடுத்துரைக்கிறார் என்றால் இழுக்கில்லை என்பார் இளம்பூரணர்.

இப்பொருளியலிற்றான் சில உரிமைகளைக் குறித்துச் சில செய்திகள் கூறுகிறார். உயிரும், நாணமும், மடப்பமும் தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகிய நால்வர்க்கும் இன்றியமையாதன என்கிறார். உயிர் அனைத்துயிர்க்கும் அவசியம். உயிர் எவ்வளவு வாழ்விற்கு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதன நாணமும், மடப்பமும் பெண்களுக்கு!

தலைவியை விட்டுப் பிரிந்த தலைவன் குறித்த நாளில் வாராது போதல் உண்டு. அவ்வேளையும் தலைவி உணர்ச்சி வயப்பட்டுத் தலைவனைத் தேடிச் சேர்தல் இல்லை என்பதை—

"உடப்பும் உயிரும்
வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல்
இவையெனின் அல்லதைக்
கிழவோர் சேர்தல்
கிழத்திக் கில்லை"

—(தொல் பொருள்-200)

என்று கூறுகிறார்.

தலைவன்-தலைவி இவ்விருவர் உடன்பாடு இடையீடின்றி இயங்கி வருதற்குத் தோழி துணையாவாள். ஆனால் இவ்வுடன்பாட்டினைத் தலைவி ஒப்புதல் பெற்றே தாய் தந்தையர்க்குத் தெரிவித்தல் வேண்டும்; தோழிதான் விரும்பியபோது கூறுதற்குரியவள் இல்லை என்கிறார்.

"அறத்தொடு நிற்குங்
காலத் தன்றி
அறத்தியல் மரபிலள்
தோழி என்ப"

—(தொல்-பொருள்-203)

இவளே நல்ல பெண்மணி! என்று இயம்புதற்குரியவளின் இலக்கணங்கள் யாவை? இவ்வினாவிற்குரிய விடையைத் தொல்காப்பியர் 203 ஆம் சூத்திரத்தில் கூறுகிறார். 'அடக்கம், அமைதி மனங்கோடாமை, சொலவல்லள், அறிவு'- ஆகிய ஐந்திலக்கணங்களும் அமையப் பெற்றவளே நல்ல பெண்மணி யாவாள். இவ்வைந்தினோடு மிகவும் பொறுப்பு நிறைந்த நல்ல பெண்மணிக்கு "அருமை"யும் அறியப் பெற வேண்டும் என்கிறார். குடும்பம் நேர்மையும், நிறைவும் குறைவின்றி இருக்கிறது என்றால் அங்கே பெண் — "அடக்கமுள்ளவளாய் இருக்கிறாள்; மன அமைதிக்கு வழி காட்டுவோளாய் விளங்குகிறாள்; எவ்வகைத் துயரத்தைக் கண்டும் நடுவு நிலை குன்றாத மனங்கோடாதவளாய் உள்ளாள்; எச்சூழ்நிலையிலும் அளவறிந்து பிறர் மனங் கோடாமல் சொல்லும் ஆற்றலைச் செப்புடையவள்; நன்மையும் தீமையும் நன்கறியும் ஆய்வுடைய அறிவு சான்றவளாய் ஆடவன் பேச்சுத்திடையில் பேசாள்; அனைத்திலும் மேலாக வாழ்வில் பிறரிடம் கூறக்கூடாத உள்ளத்தே அடக்கி வைக்கத்தக்க அருமைகளை (Secrets) அயலவரிடம் கூறாதவள்" என்று உணர்தல் வெளிப்படை.

உலகில் உயர்ந்தோர் என்போர் கூறுவன, செய்வன உயர்வுடையவை. இவையே செய்யுட்களில் செப்பப்படவேண்டுவனவும் ஆகும். ஆனால் அறவழியற்றவையும் உலகில் நடக்கின்றனவே. அவை வருதல் கூடாதா? என்றால்—

"அறக்கழி வுடையன
பொருட்பயன் வரினே
வழக்கென வழங்கலும்
பழித்த தென்ப"

(தொல்-பொருள்-214)

என்று கூறுகிறார். தாம் எடுத்துக் கொண்ட பொருளை நிறைவு செய்தற்குப் பயன்படுமானால் அறக்கழிவுடைய செயல்களும் நூலின்கண் வரலாம் என்றார். இவ்விலக்கணத்துக்கு இலக்கியமாய் "அன்னகரினா" "மேடம்பவாரி" முதலியன அமையும்.

அனைத்திற்கும் முடிமணி 219-ஆம் சூத்திரத்தில் கூறப்படுவது. உலகில் மணம்செய்து கொள்ளுதல் இன்பம் பெறுதற்கும் நல்வாழ்விற்கும் ஆகும். அத்தகைய இன்பம் தரத்தக்கவள் கட்டிய மனைவியே ஆவாள் என்பதும் உண்மை. அதற்காகக் கட்டிக் கொண்டவள் இன்பத்தைத் தந்தே ஆக வேண்டும் என்று கருதுதல் எவ்வாற்றானும் பொருந்தாது என்பதும், கட்டிய மனைவியே அன்றிப் பரத்தையிடம்கூட இன்பம் பெற்றுவிடுதல் உண்டு என்பதும் இங்குக் கூறப்படுகிறது. 'இன்பம்'' என்பது எல்லாவிதமான உயிர்களுக்கும் (விலங்கு முதல் மனிதன்வரை) மனம் ஒன்றுபட்டால்தான் இரு பக்கமும் உள்ளம் ஒன்றுபட்டால்தான் எய்தமுடியும் என்கிறார்: இவ்வியல்பு உலகம் முழுதும் ஒப்பக்கூடிய உண்மை ஆகும்.

"எல்லா உயிர்க்கும்
இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம்
மேவற் றாகும்"

(தொல்-219)

தலைவனை விட்டுப் பிரியாதவள் தலைவி. அத்தலைவனே இவ்வகை வாழ்க்கை இடையீடின்றி நடப்பதற்குரிய பொருளைத் தேடுதல் முறை. அவ்வாறு பொருள் தேடும் முயற்சியில் தலைவியை விட்டுப் பிரிந்து வேற்றூர் செல்ல வேண்டும். அதுவேளை தலைவி இவ்வாறு ஆற்றி இருத்தல் முறையாகும் என்பதை—

"செய்பொரு
ளச்சமும்
வினைவயிற்
பிரிவும்
மெய்பெற
உணர்த்துங்
கிழவிபா ராட்டே"

(தொல்-பொருள்-228)

என்று கூறுகிறார்.

தலைவன் பரத்தை ஒழுக்கமுடையவனாய் இருத்தல் உண்டு. அதனைத் தலைவி உடன்பட்டு ஏற்றுக்கொள்வாளாயினும் உள்ளத்தின்கண் ஊடல் நிகழும் என்கிறார்.

"கற்புவழிப் பட்டவள்
பரத்தையை ஏத்தினும்
உள்ளத் தூட
லுண்டென மொழிப"

(தொல்-பொருள்-229)

அவ்வாறு உடன்பாடு உள்ளமையால்தான் 'தன் தலைவன் பரத்தையரிடம் கொடுமையாக நடந்துகொள்ளலாகாது' என்று பரத்தையர் தலைவியிடம் வேண்ட, அவர்க்குதவுவாள் தலைவி என்கிறார். இதனை 231 ஆம் சூத்திரத்துள் செப்புகிறார்.

பொருளியலின் இறுதியில் தலைவியிடமும் தலைவனிடமும் காட்டக்கூடாத குணங்கள் என்று சில பொருள்களைத் தொகுத்துக் கூறுகிறார்.

தந்தையை ஒக்கும் மகன் என்ற "ஒப்பு", பயிலாத பொருளைக் கண்டுழி வரும் 'உட்கு', அடக்கமுடையவராய் 'வெறுப்பை' வெளிக்காட்டாது மனத்துள் அடக்கல்; மகளிர் மாட்டு நின்று இலங்கும் 'கற்பு'; உருவத்தில் ஏற்படும் புதிய பொலிவாகிய 'ஏர்'; 'அழகு' — (பிரித்துக் காட்டலாகாமையின் இங்குக்கூறினார்);'மென்மை'யுடையவராய் விளங்கும் 'சாயல்'; பெரியோர்ப் பேணிச் சிறியோரை அளித்தலாகிய "நாண்"; பெண்டிர்க்கு உரியதோர் 'மடன்'; துன்பமின்றி வாழமுடியாது என்றாலும் அத்துன்பம் வந்த வழி பிறர்க்குக் காட்டாத 'நோய்'; எந்த விருப்பமுடைய பொருளைக் கண்ட வழியும் அதனைப் பெற்றே ஆக வேண்டும் என்ற மன நிகழ்ச்சி 'வேட்கை'—என்று கூறப்பட்ட இவைகளை மனத்தின்கண் அடக்கிப் பிறருக்குக் காட்டாமல் பெருமையுடன் குடிகள் வாழல் வேண்டும் என்பது தொல்காப்பியரது கருத்தாகும். இம்முறையைப் பேணியே சங்க கால மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதையே தொல்காப்பியம் காட்டுகின்றது.

வாழ்க்கை 'பொருளோடு' உறவு கொண்டது; பொருள், இன்பத்திற்கு இடம் தருவது; இன்பம் எல்லா உயிர்க்கும் மனம் ஒன்றுபட்டால் நிகழ்வது; உள்ள ஒன்றுபாடு அறிவுடையார் மாட்டே செறிந்து விளங்கும் என்பதைப் பொருளியலால் அறிகிறோம்.

★

அடுத்த கிழமை—
தொல்காப்பியத்தில்...
"மெய்ப்பாட்டின் விளைவுகள்"

மாய்க்கும் கூட்டம்

குமுதமலர் இதழ்விரித்துச் சிரிக்கும் நேரம்
குறுநகையைக் கொட்டிவிட்டாள் குறும்புக் காரி
அமுதமிலை அவள்நகையோ அதையும் விஞ்சும்
அறிவிலியாய் நான்ஆனேன் ஆகா விந்தை!
கமுகுமர உச்சியிலே கடுவன் மந்தி
களிப்புடனே வீற்றிருக்கும் காட்சி நோக்கக்
குமுறியது என்னிதயம் கொந்தளித்தே
கொவ்வைஇதழ்க் கனியாளை கொஞ்சத் தானே!

'இச்'சொலிக்கும் நல்முத்தம் நினைவைப் பார்க்க
இளமுள்ளம் தவித்ததடா இன்பம் சேர்க்க
பச்சைமனம் பரதவிக்கப் பாவை சொன்னாள்
பழுத்தகனி முதுமையிலே பக்கு வம்சேர்
கச்சணிந்த காய்ப்பருவம் கன்னி யென்னைக்
கல்லெடுத்து வீசுவதால் கற்பே சாகும்
துச்சமெனப் பிறர்மதிப்பார் துலங்கும் அன்பைத்
தூற்றிடுவார் நம்காதல் துன்பம் காண!

காதலினால் மந்தியுடன் கடுவன் சேர்ந்தால்
கண்டபிற அதன்கூட்டம் வாழ்த்துச் சொல்லும்
ஆதலினால் அவையின்பம் அருவி யாகி
அசைந்தாடிப் பாய்ந்தோடி அன்பைக் காணும்
நாதமெழா இசைக்கருவி நாம்தான் ஆகி
நலிந்திடத்தான் நம்மவர்கள் நையச் சொல்வார்!
ஏதமிலாச் சொற்களினால் எழிலைக் கொன்று
எங்கோநம் காதலினை வெட்டிச் சாய்ப்பார்.

—அரிமழம்-இராம. கணபதி

மழையும் மங்கையும்

செல்லையா

மழை கொட்டுகிறது!

மங்கை நோகிறாள்!

ஆம்! தனிமை, துவளும் அக்கிளி மொழி மாதின் நெஞ்சைத் தேளாய்க் கொட்டுகிறது. கண்ணோடு கண் பேசி, நெஞ்சத்தால் ஐயுற்று, கையும் மெய்யும் தொட்டுப் பயின்று இதயத்தோடு இதயம் கலந்ததால் வந்த தொல்லை, இது!

அவன் அவளைக் காணாமலே இருந்திருக்கலாம்! என்ன செய்தாளோ... மலைச்சாரலிலே விளையாடுகையில் அவள் ஒரு நாள் அவனைக் கண்டாள். மனம் கலந்தது; இதழ் கலந்தது; உயிர் கலந்தது! ஆனால் சம்பிரதாயங்களும் முறைகளும் சிக்கல் பலவற்றை இட்டு வைத்தன.

இது அவர் தம் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம். களவு எனும் பெயரியது. இந்த அத்தியாயத்தை அணு அணுவாகச் சுவைத்தனர். பட்டப் பகலிலும் நள்ளிரவிலும் கண்டனர்; சோலையிலும் சுனையிலும், வீட்டின் வெளிப்புறத்திலும் அடர்ந்த தோப்பிலுமாக அவர்கள் முத்திரை பதித்துக்கொண்ட இடங்கள் ஒரு பன்னூறு. எண்ணரிய இன்பங்களை-சொல்லவியலா காதல் கதைகளை அளவின்றித் துய்த்தனர், அக்களவு வாழ்க்கையின் கண். முடியாத பேராறாய் அது பொங்கிக்கொண்டே பெருக்கெடுத்தது ஆமாம்! ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு சுவை! அத்தனையும் குவை குவையாய்க் கதை கூறும் இன்பச்சுவை!

அவளுக்கும் அவனுக்கும் தக்க பருவம். நல்ல கட்டழகும் தோள் வலிவும் அவளுக்கும் அவனுக்கும் சொத்து. எண்ணரிய மனப் பொருத்தம் வேறு இருந்தாலும் உற்றார் உறவினர் சூழ மணஞ் செய்துகொள்ள முடியவில்லையே! சாதி முறைகள் குறுக்கிட்டனவா? அந்தத் தொல்லையே அன்று இல்லை! தலைமுறை தலைமுறையாய் வரும் சில சம்பிரதாயங்கள்தான் தொல்லை.

வீட்டில் சொன்னால் யாரும் மறுக்கப்போவதில்லை "விட்டில் தானே விளக்கில் போய் விழலாமா?" என்று எவரும் கேட்கப்போவதும் இல்லை! "மலர்ந்த கொடிக்கு இயைந்த கொழுகொம்பு கிடைத்து விட்டானே!" எனப் பெண்வீட்டார் மகிழ்வர். "காளையைக் கட்டுப்படுத்த ஒரு பட்டுமேனிச் சிட்டு கிடைத்தாளே!" என ஆண்வீட்டாரும் அகம் மிக மகிழ்வார்கள். தடையில்லை; கவலைப்பட வழியுமில்லை. ஆனால் ஒரே சிக்கல்: பூனைக்கு யார் மணி கட்டுவது?

'நான் அவளை விழைகிறேன்!'. என்று சொல்ல அந்தக் காளைக்கு நடுக்கம், "என்னைக் காதலிக்கிறார்!" என்று சொல்ல அவளுக்கும் மருட்சி; வெட்கம். வீட்டார், தாமே இவற்றையறிந்து செயல்படுவதற்கும் வழியில்லை! அப்போது தோழி வகுத்துக் கொடுத்த வழியோ....அவர்களே போட்டுக்கொண்ட திட்டமோ...இருவரும் ஒருவருடன் ஒருவராகப் போயினர்; ஆமாம்! ஊரைவிட்டே ஓடிப்போயினர்! அப்படி ஓடிப் போனவர்கள் எங்கோ ஓர் ஊரில் திருமணம் செய்துகொண்டனர். அங்கேயே குடி அமைத்துச் சிலநாள் வாழ்ந்தனர். வாழ்க்கை நூலின் அடுத்த பகுதி, இது. கற்பு என்று தலைப்புக் கொடுத்திருக்கின்றனர். இந்தப் பகுதியையும் எழுத்துக்கெழுத்துச் சுவைத்தனர். பெருங் காப்பியங்களெல்லாம், இப்படி வாழ்க்கைக்குமுன் சிறு துளிகளாய் விடுகின்றன. காப்பியங்களைவிட இந்த வாழ்க்கை, பலவகைகளில் இன்பம் பொழிகிறது. சத்தான உண்மைகளை நேருக்குநேர் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. மறக்கமுடியாத நிகழ்ச்சிக் கொத்துக்கள் ஒன்றன் பின் ஒன்றாய் மலர்ந்தெழுகின்றன. ஓரிருதிங்கள் இப்படி வாழ்க்கை நடத்தியபின் பிறந்த இடத்து நினைவு இருவருக்கும் வந்துவிடுகிறது. "பெற்ற பிள்ளையை-தொட்டிலிலிட்டு வளர்த்த அருமந்தக் கனியை-பருவம் கொழித்து நின்ற தோகைமயிலை எப்படிப் பிரிந்திருக்கிறோம்?" எனத் தலைவி வீட்டில் வருந்துவரெனத் தலைவன் கூறுகிறான். தலைவியும் அப்படியே பேசுகிறாள். 'நாம்செய்தது சரியோ-தவறோ? ஊர்திரும்பினால்எம் வீட்டாரும் நும்வீட்டாரும் கட்டாயம் எதிர்கொண்டழைத்து நல்வாழ்த்துக் கூறி, நம் வாழ்வைத் தழைக்கச் செய்வர்!" என்று தலைவி கூற இருவரும் ஊர் திரும்பி வருகின்றனர்

இழந்த தனத்தைப் பெற்ற வறியோர்போல, மீண்ட மக்களைத் தழுவிக்கொள்கின்றனர் இரு சாரரும். தலைவனும் தலைவியும் பெற்றோர் தம் அன்பு மழையில் நனைந்து, சொந்த ஊரிலேயே இல்லறம் நடத்துகின்றனர். வாழ்க்கை ஏட்டின் ஒவ்வொரு பக்கத்தையும் பொன் கொழிக்கும் சோலையாக்குகின்றனர்.

இடையே எழுந்தது ஒரு கேள்வி. பெற்றோர் திரட்டிய முத்தும் மணியும் குவை குவையாய்க் கிடக்கின்றன. என்றாலும் தன்மானமுள்ள ஒருவன்-உழைக்கும் திறனும் உள்ளவலிவும் கொண்ட ஒருவன் அவற்றையே துய்த்திருத்தல் - நம்பி வாழ்தல், நன்றோ? கூடாது! கூடாது! தன்னுடைய திறமையைத்தும் காட்டி, வான் பொருளீட்டி அது கொண்டு வாழ்தலே மானமுடைமை! இந்த எண்ணம் வந்த தலைவன் அவளைப் பிரிந்து வேற்றூர் சென்று வணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டி வர ஒப்புதல் கோருகிறான். தலைவி முதலில் வருந்தினாலும், நிலையுணர்ந்து, செல்வதற்கு விடை கொடுக்கிறாள். அவள் வழிந்த கண்ணீரும் வருந்திய இதயமுமாய் வழியனுப்புகையில் "முகமலரே! மொய் குழலே! செல்லும் செயல் முடிந்ததும் நில்லாது திரும்புவேன்; கார் காலத்திற்குள்ளாகத் திரும்புவேன்; கவலைப்படாதே!" என்று கூறிச் சென்றான் தலைவன். நல்ல நம்பிக்கையில்தான் விடை கொடுத்தாள் தலைவி. கார்காலத்திற்குள் தார்மார்பன்-தன் இதயத்தான் திரும்பிவிடுவான் என்றெண்ணித்தான் அனுப்பி வைத்தாள். ஆனால்...

வானம் பொத்துக்கொண்டுவிட்டது. வரண்டு கிடந்த குளங்களெல்லாம், தூர்ந்து கிடந்த நீர் நிலைகளெல்லாம் பொங்கி வழிகின்றன. அவை மட்டுமா? அவள் விழிகளும் பொங்கியெழுகின்றன; நீர்த் துளிகள் வழிகின்றன!

மழைக் காலத்திற்குள்ளாகத்திரும்பிடுவேன் என்ற மணாளன், மழை காலம் வந்தும் திரும்பவில்லை! ஏன்? தனியாயிருத்தலே துன்பம்! அதிலும் மழையும் சேர்ந்து கொண்டுவிட்டால்...மலைச்சாரலிலே கண்டு, மாதவிக்கொடி நிழலிலே தழுவி, மடுவிடை உள்ள சுனையில் குடைந்து விளையாடி, மலர் கொண்டு வந்து சூட்டி மனதைக் கிள்ளி விட்டான்; மார்போடணைத்துக் கொண்டான். அன்று கண்ட மகிழ்விற்கு, மலைக்குன்றும் கீழாமே!

"போவோம்!" என்றான். உடன் போனாள்... பெற்றோரையும் மறந்து பிரிந்து போனாள்...அன்றில் போல் இணைந்து நின்று அணுவுக்கணு இளமையின் விருந்தை உணர்ந்தாள்...விநாடிக்கு விநாடி சுவைத்தாள் 'இனி ஏது புது விருந்து?" என்று திண்டாடிப் போகுமளவிற்குச் சுவைத்தனர்.

ஊருக்குத் திரும்பினர். வாஞ்சை பெருக, புதுப் புதுக்கதைகளைப் படித்தனர். இனிய இனிய சேதிகளை ஆயிரம் ஆயிரமாய் அப்போதும் படித்தனர் என்றாலும் ஆசைக்கோர் அளவில்லை

மழைக் காலத்திற்குள் திரும்பிவிடுகிறேன் என அவன் சொன்னதும் எத்தனை பெரிய நம்பிக்கை வைத்திருந்தாள்! ஆனால்...வழியில் என்ன தடையோ...ஆற்றில் புதுவெள்ளமோ? வாகனம் கிடைக்கவில்லையோ? வணிகம் முடியவில்லையோ? ஏதோ ஒருதடை! அவன் இன்னும் வரவில்லை. மழைத்துளிகளோ-கொடிய கூதலோ - கடும்பனியோ, அவளை விடாது குத்துகின்றன. ஊரிலுள்ள எல்லோரையும் அவை தாக்கவில்லையாம்! வெந்து புலம்புகிறாள்; பொருள் தேடப்போனவன் வரவில்லையே என நொந்து சாகிறாள்...

இதுதானய்யா பெண் உள்ளம்... காதல் சூழலுக்கு ஆற்றாது அழுது புலம்பும் அந்த நெஞ்சம்தான் பெண் நெஞ்சம்! ஆண்டு ஒன்றிரண்டாக, அவனோடு வாழ்க்கையின் ஒவ்வொரு ஏட்டையும் புரட்டிப் படித்தவள்தான், அவனைச் சில திங்கள் பிரிந்திருக்க வெதும்புகிறாள்.

இப்படி ஒரு உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டி, நமக்குப் பெண் மனதைக் காட்டுகிறான் ஒரு புலவன். அவன் பெயர் **கச்சிப்பேட்டு நன்னாகையான்.**

"மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. நொடிக்கு நொடி குளிர் ஊசிபோல் குத்துகிறது! குளிரும் மழையும் கலந்தஇக்கூதிர்ப் பருவம் வெறும் பருவம் மட்டுமன்று; கணவரைப் பிரிந்திருக்கும் என்னுயிர் பிரிக்கும் கொடுங் கணை! வலிய படை இது! இதற்கு வேறு யாரும் குறியில்லை; கணவனைப் பிரிந்திருக்கும் நான்தான் பகை. என்னைத்தான் குறி வைத்து அது சாடுகிறது. இக்கூதிர் காலம் வந்தது தெரிந்தும் என்னவர் வரவில்லையே! நான யாது செய்வேன் தோழி? நாம் என்ன செய்வோம் தோழி! ஐயகோ! கூதிரே! நீ ஒழிக!" என்று அவள் கூறினாளாம்.

கொடிய மழையையும் அதைப் பொறுக்காது குமுறும் மங்கையையும் வடித்துக் காட்டும் வண்ணக் கற்றை இது!

"யாதுசெய் வாய்கொல்
தோழி நோதக
நீரெதிர் கருவிய
காரெதிர் கிளைமழை
ஊதையங் குளிரொடு
பேதுற்று மயங்கிய
கூதிர் உருவில்
கூற்றம்
காதலர் பிரிந்த
வெற்குறித்து வருமே!"
—குறுந்தொகை, 197-ம் பாடல்.

நிலைகுலைய வேண்டாம்!

கேரளத்து மாதாவே கீழான மானிடரால்
சீரழிவு கொண்டாயே! செயலிழந்து நின்றாயே!
நலந்தேடு மைந்தர்தமை நாசமிகு கும்பலெலாம்
பலமற்ற தாயெண்ணிப் படுமோசம் செய்யுதையோ!
குண்டர்தமை நீ அடக்கக் கொதித்தெழுந்தாய் நின்வாழ்வைக்
கொன்றொழிக்க முனைகின்றார் கொல்மதியார் ஐயய்யோ!
நின்செயலைக் குறைகூறி நெடுவசவு தருவோரை
என்சொல்லி உணர்த்திடுவோம்; என்னவென்று சொல்லிடுவோம்!
மாணவர்தம் செல்வங்கள் மாண்டுவிழ இந்நாட்டில்
ஆணவத்து நேருபிரான் அதிகாரம் முன்தந்தார்
முதுகுளத்தூர் சீமையிலே முதலமைச்சர் சுட்டதெலாம்
புதுயுகத்துச் செயலென்று பொருள்கொண்ட காரணமோ!
சேலத்தில் கைதிகளைச் சிறையதனில் சுட்டதெலாம்
சீலத்துச் செயலென்று செப்புவரோ அறிவுடையார்!
பிழைசெய்து நாட்டாரின் பீடெல்லாம் கொன்றொழித்தார்
களைசேரும் ஆட்சிக்கே காலமெலாம் சான்றானோர்
இன்னபிற பேரெல்லாம் என்றென்றும் கொலைசெய்தும்
அன்னவரை மன்னிக்கும் அரும்மாந்தர் உண்டிங்கே!
உன்செயலால் புதுத்தேர்தல் உருவாக வேண்டுமென்போர்
தம்செயலை எண்ணாமல் தம்பட்டம் அடிக்கின்றார்!
புன்செயலால் தம்நாட்டைப் பொசுக்கிட்ட பேர்வழிகள்
நன்மனத்தார் போலிங்கே நடிக்கின்றார்; நன்றாமோ!
நெறிகொன்ற பேரெல்லாம் நிலவுகிறார் இந்நாட்டில்
நெறிகாக்கும் மாதாநீ நிலைகுலைய வேண்டாங் காண்!

—தமிழ்ப்பித்தன்

வெங்குருதி சிந்துவோம்!

வெற்றிப்பண் பாடுவோம்!

ஜூலை 15

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சரித்திரத்தில் தியாகத் தழும்புகளைப் பொறித்துக்கொண்ட நாள்! ஏகாதிபத்திய வெறி பிடித்த வட நாட்டுப் பெருந்தலைகளின் நெஞ்சங்களை நடுங்கச் செய்த நாள்! நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு இது ஒரு முன்னறிவிப்பு என்று அறைகூவல் விடுத்த பொன்னாள்! மும்முனைகளில் நின்று மூன்று தீய சக்திகளை எதிர்த்துப் போராடி இளங்காளைகள் அறுவரைப் பலி கொடுத்து, தடியடிபட்டு, உறுப்புகளை இழந்து, ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்களைச் சிறைக்கோட்டத்திற்கனுப்பி வெற்றி மாலை சூடிய நாள் ஜூலை 15!

"நாடு மகிழ, நல்லவர் இதயம் வாழ்த்துக் கூற, கேடுகளைந்தோரே! தன் மானம் காத்தோரே! சோறு பெரிதல்ல; மானமே பெரிதென்ற மறத்தமிழர் வழி வழியே! நீவிர் வாழ்க! நும் கொள்கை வளர்க" என்று நாடே நம் திசை திரும்பி வாழ்த்தொலி முழக்கிய நாள் ஜூலை 15.

இளஞ்சிறார்களின் எதிர்காலத்தைக் குருடாக்க வந்த குல தர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஒரு பக்கம்!

வட நாட்டு ஏகாதிபத்தியத்தின் அறிகுறியாக இருக்கும் அவமானச் சின்னமாம் டால்மியாபுரத்தை எடுத்துவிட்டு அழகு தமிழ்ப் பெயராம் கல்லக்குடி என்று பொறிக்கும் போராட்டம் இன்னொரு பக்கம்!

திருக்குறள்போல் நீதி நூல் பிறக்காத கங்கைக்கரையில் பிறந்துவிட்ட பண்டிதர் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்ற குறள் பிறந்தகாவிரிக்கரைவந்துவரம்பின்றி வார்த்தைகளைக் கொட்டிய சிறுபிள்ளைத் தனத்தைக் கண்டித்துத் தன் மானப் போராட்டம், மற்றொரு பக்கம்!

"மூன்று போராட்டங்களும் ஒரே சமயத்திலா? முடியுமா இவர்களால்? எங்கிருந்து அவ்வளவு படை வரும்? அங்கொரு நூறு பேர், இங்கொரு ஐம்பது பேர் வருவர். அவர்களைப் பிடித்து அடைத்துவிட்டால் பிறகு எங்ஙனம் நடக்கும் போராட்டம். அத்துமீறினால் கண்ணீர்ப் புகை; சிதறி ஓடுவர்! (நாம் ஓட்டவில்லையா சுதந்தரப் போராட்டக் காலங்களில்!) இப்படித்தான் கணக்குப் போட்டனர் குறிப்பறியாத மரங்கள்!

பிறகு என்னவாயிற்று? மூன்று முனைகளிலும் மடை திறந்தாற்போல் படை வந்தது! பிடித்து அடைக்க அடைக்க அணி அணியாய்ச் சங்கிலித் தொடர்போல் வந்துகொண்டிருந்தனர். தடியால் அடித்தனர்! கண்ணீர்ப்புகை பாய்ச்சினர்! நெஞ்சிலே உரம்கொண்ட காளைகள் அசையவில்லை. அது வெறும் சோற்றுப் போராட்டமாயிருந்தால் திசைக்கு நான்கு பேராகச் சிதறி ஓடியிருப்பர். அந்த வெற்றியில் தானே நம் எதிர்காலம் அடங்கியிருந்தது!

இன்று கேரளத்தைப் பார்த்து "ஐயோ, சுடுகிறார்களே! தீபாவளிக்குப் பட்டாசு சுடுவதைப்போல் மக்களைத் துச்சமாக நினைத்துச் சுடுகிறார்களே? இது அடுக்குமா? நடக்கலாமா இப்படி?" என்று குடல் பதறுவதுபோல் நடிக்கும் காங்கிரசார் அன்று தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் சுட்டார்கள். இன்றைக்கு "மக்களைச் சுடலாமா? அவர்களென்ன காக்கையா? குருவியா?" என்று பதை பதைக்கும் மனம் அன்று இரும்பாக அல்லவா இருந்தது! இன்றைக்கு ஜனநாயகம் பேசுகிற நாக்கு அன்று எச்சிலை வடித்துக் கொண்டு திராவிடர் ரத்தம் குடிப்பதற்கல்லவா தொங்கிக்கொண்டிருந்தது!

ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர் கைது செய்யப்பட்டனர். சிறையில் இடமேது? கிரிமினல் கைதிகளை அவிழ்த்துவிட்டு, கழகக் காளையர்களை தலையணைக்குள் பஞ்சைத் திணிப்பதுபோல் திணித்துப் பார்த்தனர். ஆயினும் மாளாத இடநெருக்கடி! ஒரு மாதம் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மூன்று நாட்களில் விடுதலை செய்யப்பட்டார்கள். சிலர் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் இடமில்லாததால் கோர்ட்டிலிருந்தே வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். எங்கிருந்துதான் வந்தனரோ இவ்வளவு பேர்! கழகத்துக்கே தெரியாது!

சென்னையில் ஆச்சாரியார் வீட்டுக்கு முன்பாகக் குலதர்ம கல்வித் திட்டத்தை எதிர்த்து சத்தியவாணி முத்து அவர்கள் தலைமையில் போராட்டம்!

கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் டால்மியாபுரம் என்ற கறைபடிந்த பெயர் கல்லக்குடியாக மாற்றப்பட்டது!

கண்ணதாசன் அவர்கள் தலைமையில் புகை வண்டிமுன் படுத்து மறியல் செய்யப் படை திரண்டது. ஒவ்வொரு அணியினரும் தண்டவாளத்தின்மேல் தலை வைத்துப் படுத்து **"ஓடி வரும் ரயிலே, உயிரைக் குடித்துவிடு! தில்லி ஏகாதிபத்தியமே! டால்மியாபுரம் என்ற அவமானப் பெயரை எடுத்துவிடு!"** என்று முழக்கினர்! ஓடுமா வண்டி? அவ்வளவு தைரியம் உண்டா அவர்களுக்கு! போராட்ட வீரர்களை இழுத்து எறிந்தனர். காலால் உதைத்து உருட்டிவிட்டனர். தடியால் அடித்தனர்; கையை முறித்தனர்! கொள்கைக்காக உயிரை அர்ப்பணித்தோர் தொல்லைகளைத் தாங்கிக்கொண்டனர். மூன்று போராட்டங்களும் வெற்றிகரமாக நடைபெற்றன. மொத்தமாகச் சொன்னால் ஓர் இயக்கம் வரலாற்றில் இடம் பெறுவதற்கு வேண்டிய அத்தனை தகுதிகளையும் மும்முனைப் போராட்டம் நமக்கு அளித்திருக்கிறது. இது நமக்கு மாபெரும் வெற்றி!

குலதர்மக் கல்வித் திட்டம் குடை சாய்ந்துவிட்டது. கொண்டு வரப்படவில்லை! நேரு பண்டிதர் இப்பொழுது தெற்கு நோக்கி வரும்போதெல்லாம் உணர்ச்சிக்கு அடிமையாகாமல் கொஞ்சம் பெருந்தன்மையோடு பேசுகிறார். இந்த மாற்றங்களெல்லாம் நம் போராட்டத்தினால் ஏற்பட்ட பலன்கள்.

ஆனால் டால்மியாபுரம்...?

வெறும் வாயை மெல்லும் கிழவிகளுக்கு அவல் கிடைத்ததைப்போல், மாற்றுக்கட்சி நண்பர்களுக்கு இது ஒரு கேள்வி. கனக-விசயரைப் பற்றி கதைபேசுகிறீர்களே-வடவராட்சியை முறியடிப்போம் என்கிறீர்களே-டால்மியாபுரத்தை உங்களால் மாற்ற முடிந்ததா? இரண்டு வெற்றிகளை மறந்துவிட்டு நம்மால் மட்டுமே குறுகிய காலத்திற்குள் நிறைவேற்ற முடியாத ஒன்றைப் பற்றியே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட்களும், சோஷலிஸ்ட்களும், தீவட்டிப் போராட்டத்தைத் தவிர வேறெதிலும் நம்பிக்கையில்லாதோர். திராவிடர் கழகமும் கேட்பதைப் பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. திறக்காத திருவாயைத் திறந்து காமராசரும் கேட்கிறாரே அதுதான் நமக்கு விந்தையாக இருக்கிறது! காமராசர் மௌனமாகவே இருந்து காரியத்தைச் சாதிப்பவர் என்று சொல்லுவார்கள். பாவம்! அவர் எப்பொழுதும் மௌனமாகவே இருந்துவிடலாம். தப்பித்தவறி எப்பொழுதாவது வாயைத் திறந்தால் கூவத்தின்வாடைகூடவேவருகிறது.

"கார்ப்பரேஷனில் நாற்பத்தைந்து பேர் வந்துவிட்டால் போதுமா? காரியம் சாதிக்கவேண்டாமா? இவர்களால் என்ன சாதிக்கமுடியும்? இன்னும் டால்மியாபுரத்தையேமாற்ற முடியவில்லை." இவை காமராசர் சிந்திய முத்துக்கள்! இவரென்னவோ வடக்கே போய் அத்தனை காரியங்களையும் சாதித்துக்கொண்டு வந்துவிட்ட மாதிரியும்; இவர் பேச்சுக்கு அங்கு மறுப்பில்லை என்பதுபோலவும் நம்மைப் பார்த்துக் கணைக்கிறார்!

தென் உணவு மண்டலக்குழுவிலிருந்து சென்னையைத் தனி மண்டலமாக ஆக்கிக்கொள்ள விரும்புவதாகக் கேட்டு "இதற்கு ஒப்புதல் தரவில்லையென்றால் மாநிலப் பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள்!" என்று மிரட்டி, தில்லிக்குப் படையெடுத்துப் போய்த் தண்டனிட்டுச் சாதித்துக் கொண்டு வந்த சாதனை என்ன என்பதை நாடறியும்; நாமும் அறிவோம்!

தேவிகுளம்-பீர்மேடு பிரச்னையில் தில்லித் தலைமை பீடம் ஒரு கண்ணில் சுண்ணாம்பு வைத்துவிட்டதைக் கண்டித்து நியாயம் கேட்கப் போய் கிடைத்த செங்கோட்டையையும் கோட்டை விட்டு வந்த திறமை-சாதனை யாருக்கு வரும் காமராசரைத்தவிர!

இந்தியைத் தென்னாட்டில் பலவந்தமாகத் திணிக்க முயலாதீர் என்று பலமுறை பறந்து போய்க் கேட்டு வந்தும்; இந்தி நயா காலண்டராகவும், நயா பைசாவாகவும், மைல் கற்களிலும் அவசர அவசரமாகத் திணிக்கப்படுகிறதே-இதில் காமராசரின் செல்வாக்கு என்னவாயிற்று? ஒரு மாநிலத்தின் முதலமைச்சராலேயே, தில்லித் தலைகளிடமிருந்து நூறில் ஒரு பங்குகூட காரியங்களைச் சாதித்துக்கொள்ள முடியவில்லை என்றால் அந்த மாநிலத்தில் எதிர்க்கட்சியாக விளங்கும் நம்மால்மட்டும் எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் டால்மியாபுரத்தை மாற்ற இயலும்?

அடுத்து; டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்றுகின்ற அதிகாரம் - மாற்றுவதற்குத் தூண்டுகோலாக இருக்கவேண்டிய பொறுப்பு, யாரைச் சார்ந்தது? மாற்றுவதற்கு வேண்டிய அதிகாரம் தில்லி சர்க்காரின் கையில் உள்ளது. "அதைச் செய்யுங்கள்; அது நியாயம்தான்!" என்று சொல்ல வேண்டிய பொறுப்பு காமராசரின் கையில் உள்ளது. காமராசரின் முயற்சியால் டால்மியாபுரம் மாற்றப்பட்டால்-அதற்குக் கீழே "கல்லக்குடி எனப் பெயர் வருவதற்கு அரும்பாடுபட்டவர் விருதுநகர் வீரர் காமராசர்" என்று வேண்டுமானால் பொறித்து வைப்போம். எதிர்காலச் சந்ததிகள் அவரையே போற்றட்டும். நமக்கு வேண்டியது பெயரல்லவே! இதை மறந்துவிட்டு உங்களால் முடிந்ததா என்றால் முடிவதற்குத் தடைக்கல்லாக இருப்பவர் நீங்கள்தான் என்போம்.

முடியும் - நாளையே மாபெரும் போராட்டம் நடத்தி கல்லக்குடியாக மாற்றுவதற்கு முடியும். ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகளைத் தாங்கிக்கொள்ளும் சக்தி காமராசருக்கு உண்டா?

காமராசர் தன் சூறாவளிச் சுற்றுப் பயணத்தில் பொறுப்பற்ற முறையில் எதையாவது பேசி, கட்சிக்கு வேலியமைக்கப் பார்க்கிறார். ஆனால் இந்த வார்த்தை வேலி காங்கிரஸ் கூடாரத்தை நிச்சயம் காப்பாற்றாது என்பது உண்மை. சென்னை நகரசபை இதற்குக் கண்கூடு!

நாம் எதையும் ஜனநாயக முறையிலேயே சாதிக்க நினைக்கிறோம். இன்றில்லாவிட்டால் நாளை; நாளையில்லையேல் மறுநாள்-நாம் பட்டபாட்டிற்கு, கொட்டிய குருதிக்கு, தாங்கிக் கொண்ட தொல்லைகளுக்கு, உயிரிழந்தசெம்மல்களின் தியாகத்திற்குப் பலன் கிடைக்கும். **டால்மியாபுரம் கல்லக்குடியாக மாறும் - பெயர் மட்டுமல்ல; மக்கள் விழிப்படைந்தால், அரசுகூட!** இது ஆரூடமல்ல; பல விடுதலை வரலாறுகள் இதைத்தான் நமக்குக் கூறுகின்றன. ஆனால் இது காமராசருக்குப் புரிய வேண்டுமே?

-தினகரன்

ஆகஸ்ட் முதல் வெளி வருகிறது!

"தமிழரசி"

[புதுமைத் தமிழ் மாத ஏடு]

ஆசிரியர்: **மா. வீ. பாண்டியன்**

செந்தமிழ்த்தேன் மணக்கும் சிந்தனைச் சோலை!
பத்திரிகை உலகில் ஒரு செயற்கை நிலா!

தனி இதழ் 25 காசு.
எங்கும் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:—
"தமிழரசி", 229, இடையர் வீதி, கோயமுத்தூர்-1.

அலட்சியம் செய்தவர்கள் அணுகிப் பார்க்கிறார்கள்!

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

மனவளத்திற்கேற்ப ஆட்சி நடத்தவில்லை. போட்டியும் கட்சிக் கொந்தளிப்பும் வளர்ந்தன. அவர்கள் தங்கள் பீடங்களை வெகு விரைவிலேயே காலி செய்துகொண்டார்கள்! இரண்டாவது பொதுத் தேர்தல் முடிந்தவுடன் கம்யூனிஸ்ட்கள், சுயேச்சைகளையும் திடீர்க் கம்யூனிஸ்ட்களையும் சேர்த்துக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆனால் மக்களின் கண்ணீர் நிற்கவில்லை. இரத்தக் கண்ணீர் சிந்துகிறார்கள். அவர்களிடையே அலங்காரச் சட்டங்களிருந்தும் அழுகுரல் மாறவில்லை!

மக்களாட்சிப் பண்புக்கு மரணக்குழி பறித்துள்ள அரசியல் குருடர்களின் எண்ணிக்கை பெருகிவிட்ட காரணத்தினால் கம்யூனிஸ்ட்கள் தங்களின் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பல தவறுகளைச் செய்கிறார்கள். பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் பதுங்கியிருந்து கட்சியை வளர்ப்பதிலே பழக்கப்பட்டவர்கள். சர்வாதிகாரிகளாக மாறிவிட்டார்கள். மதவெறியர்களுடன், பாதிரிமார்களுடன், பதவிப் பித்தர்களும் கேரளத்தைப் போர்க்களமாக்கிவிட்டார்கள். பார்புகழும் பண்டிதரும் பவனி வந்தார். பட்டங்களையும் பணம் பள்ளிகளையும் பாராட்டும் வகையில் ஆய்வுரைகளைத் தந்துவிட்டுப் போனார். அகில உலக ஆசான் மாற்றுக் கட்சியின் ஆட்சியினைக் கவிழ்க்கப் புதுப் புதுத் திட்டங்களைத் தயாரிக்கும் தன்னுடைய கட்சியினரைத் தூண்டுகிறார். தலைவியாக இருக்கின்ற தன் மகள் இந்திராவும் தேபரும் செய்யத் தவறிச் சொல்ல மறந்திடும் சூழ்ச்சி வழிகளைக் கற்றுக் கொடுப்பவராகிறார். மக்களாட்சிப் பண்புக்கு, அகில இந்தியக் கட்சிக்காரர்களின் அடாத செய்கைகளுக்கு முடிவு கட்டும் ஆசை கொண்டுள்ள மக்கள் தம் பார்வையினை முன்னேற்றக் கழகத்தின் மீது திருப்பியுள்ளனர். கழகத்தின் கூட்டங்கள் பாலக்காட்டில் நடைபெற்றாலும் கொல்லத்தில் நடைபெற்றாலும் சோரனூரில் நடைபெற்றாலும் திருவனந்தபுரத்தில் நடைபெற்றாலும் கேரளத்து மக்கள் உன்னிப்பாகக் கவனிக்கின்றனர். கழகத்தின் பாதையிலே பின் தொடரத் துடிக்கின்றனர். அண்ணா அவர்களே! உங்களைக் காணவும் உங்கள் உரை கேட்கவும் தமிழகத்துப் பெருமக்கள் இன்னும் தங்கள் ஆசையினைக் குறைத்துக்கொள்ளவில்லை. தினம் தினம் எண்ணிக்கை அங்கே வளர்கிறது என்றால் கேரளத்தின் நிலையை நான் கூறத் தேவையில்லை. இரண்டு திங்களுக்கு முன்னால் நீங்கள் திருவனந்தபுரத்தில் வந்து தங்கியிருந்த நாளில் அந்தக் கேரளத்துத் தலை நகரம் எத்துணை ஆவலோடு உங்களைக் காணத் துடித்தது! அங்கே மாஜி மன்னர்கள் இருக்கிறார்கள். பலப்பல அரசியல் தலைவர்கள் உள்ளனர். பத்மனாபசுவாமிகளின் பிரசாதம் வாங்கிப் புசிப்பதே பிறவிப் பயன் என்று கருதியிருக்கும் பார்ப்பன நம்பூதிரியார்–முதல் தரத்துக் கம்யூனிஸ்ட், அங்கே முதலமைச்சராக இருக்கிறார்-இருந்தாலும் அண்ணா அவர்கள் வந்துள்ளார்கள் என்ற சேதியினைக் கேட்ட மக்கள் ஆர்வத்தால் மகிழ்ந்தனர். தங்கியிருந்த இடம் தேடி அலைந்தனர்–காணமுடியாமல் கலங்கினர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை வருங்கால ஆசானாக்கிக்கொள்ள, கேரளம் தன்னைத் தயார் செய்துகொண்டு அரசியல் கசடர்களின் பிடியிலேயிருந்து விடுவித்துகொள்ளத் துடித்துக் கிளம்பியுள்ளது! கேரள மாநிலக் கழகத்தின் பணியினை அறிவகத்தின் உறுதுணையால் மேலும் துரிதப்படுத்த வேண்டும். மதமாய்கையிலேயுள்ள மக்களைப் பெரும் தொல்லைகளைத் தாங்கிக் கொண்டாவது நம்பக்கம் இழுத்தாக வேண்டும். ஆந்திரத்திலும் கன்னடத்திலும் நீங்கள் வருகிறீர்கள் என்றால் இதுவரையிலும் காணாத, காண முடியாத, ஒரு விடுதலைத் தலைவரைக் காணப்போகிறோம் என்றுதான் அந்தப் பகுதி மக்கள் எண்ணுகிறார்கள். கேரளத்து ஆசை எந்த வகையிலும் குறைந்ததல்ல! உங்களுடைய புதுடில்லி வருகையைப் பற்றி இங்கே இரு கம்யூனிஸ்ட் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெருமைபடச் சொன்னார்கள். உங்களைச் சந்தித்து அறிவுரையும் அன்புரையும் பெறும் வாய்ப்பை எதிர்பாரா நேரத்தில் இழந்தமைக்கு வருந்துகிறார்கள்! உங்களுடைய எழுத்தோவியங்களை 'ஹோம் லண்ட்'' இதழில் காணும்போது, கழகத்தின் கொள்கைச் சிறப்புகளை–இலட்சிய மாண்புகளை அறிகின்ற நேரத்தில், மகிழ்ச்சிப் பெருக்கால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையினை உணர்கிறார்கள். திருவனந்தபுரம் நகரத்தில் மாணவர் பட்டாளம் திரண்டு நிற்கிறது. மாற்றுக்கட்சியினர் தங்கள் நலன் கருதி எங்கெங்கோ அழைக்கிறார்கள். கொடிபிடித்துக் குரல்கொடுக்க வேண்டுகிறார்கள்! அவர்களிலே பெரும்பகுதியினர் உள்ளம்உங்கள் பக்கம் உள்ளது எனவேதான் அங்கே ''ஹோம் லண்ட்'' இதழ்கள் நகரத்திற்கு வந்தவுடன் விற்பனையாகின்றன. காத்திருந்து பெற்றுக் கொள்ளாவிட்டால் கிடைப்பதில்லை! கேரளத்து இந்தச் செய்திகள் எல்லாம், முன்னேற்றக் கழகத்தின் நிலையினைக் கூறி நம் கடமைகளைப் பெருக்க வேண்டுமென்று திட்டமாக நினைவூட்டுகின்றன. கேரளத்துடன் போட்டியிடுகிறது நம் கன்னடநாடு!

கழகமுன்னணிப் பிரச்சாரக்குழுவினர் மதியழகனும் சிற்றரசுவும் பெங்களூர் செய்தியாளர்களுக்குச் சொன்ன கொள்கை விளக்கம் பெரும் பலன் தந்ததைக் கன்னட ஏடுகளின் மதிப்புரையிலே கண்டோம்; களித்தோம்!

திராவிட முன்னேற்றக் கழகம். தமிழகம் தவிர்த்த ஏனைய திராவிடத் பகுதிகளில் பலம் குன்றியிருப்பதையே காரணமாக வைத்துக் கணக்கிட்ட மாற்றுக் கட்சியினர் இப்போதுதான் புதிய கணக்கீடுகளைக் காண்கிற வாய்ப்பினைப் பெறுகிறார்கள். நாட்டின் நிலையுணர்ந்த கழகத்தவர் சட்டமன்றத்திலே இடம் பெற்ற போது இந்தியத் துணைக்கண்டம் ஒரு புத்தம் புது எழுச்சியினைக் கண்டது! அண்ணா அவர்களே! உங்கள் வேண்டுகோளை – குன்றத்தூர் துப்பாக்கி வேட்டையைக் கண்டிக்கும் கழகத்தின் தீர்மானத்தை, வெளியிட மறுத்து உங்களுக்கே திருப்பி அனுப்பிய ''பிளிட்ஸ்'' பத்திரிகைதான், கழகத்தின் சட்டமன்ற–நகராட்சிமன்ற வெற்றிகளைப்பற்றிய செய்திகளைத் தருகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகமென்ற விடுதலை இயக்கம் வீரச் செயல்களைப் புரிகிறது எனக் குறிப்பிட்டு எழுதுகிறது. 'லிங்க்' என்ற ஒரு ஏடு கழகத்தின் சாதனைகளைப் பாராட்டுகிறது; வளர்ச்சியினைக் கண்டு ஆச்சரியப்படுகிறது; புதுடில்லி ஆதிக்கவெறியர்களுக்குப் பாடம் போதிக்கிறது, ''கழகத்தின் வளர்ச்சியினைக் கவனியுங்கள்; காலங் கடத்தாதீர்'' என்று! 'கரண்ட்' என்ற காரகாவின் வார இதழ் அடிக்கடி முன்னேற்றக் கழகத்தின் செய்திகளைப்பெரிதாக மதிக்கிறது. பொதுச் செயலாளர் நம் நாவலர் அவர்கள் பம்பாய் சென்ற நேரத்தில் தந்த கொள்கை விளக்கத்தைப் பூரிப்பாக வெளியிட்டிருந்தது! திராவிடம் மட்டுமல்ல, வடநாடும் நம் வளர்ச்சியினை வரவேற்கிறது; வாழ்த்துகிறதென்பதைத்தான் இந்தச் சேதிகள் சொல்லுகின்றன. எனவே நம்கடமைகளும் பெருக்க வேண்டும். கழகத்தின் அமைப்புகளை, புதிய சட்டமுறைகளுக்கேற்ப விரைவுபடுத்தி, துரிதப்படுத்த வேண்டும்! அண்ணா அவர்களே! மீண்டும்மீண்டும் நம் பெருமைகளைச் சொல்லி மகிழ்விக்கமுடியும் என்னால்–மனக்கசப்பான செய்திகளையும் நீங்கள் அறிவீர்கள். அவைகளை நினைவூட்டுவது என் தவறானால் தம்பியை மன்னித்துவிடுங்கள். வருங்கால வரலாற்று வல்லுநர்களும் திராவிட இனத்தவரும் ''உலகைத் திருத்திய உத்தமர்களில் ஒருவரும், தனக்குஇணையில்லா நாடகப் பேராசிரியரும், மாற்றாரும்மயங்கிடும் சிறந்த பேச்சாளரும், எதிரியும் புகழும் பேரறிஞரும், தொண்டர்களை உடன்பிறந்த தம்பிகளாகப் போற்றும் ஒரு அரசியல் தலைவருமான அறிஞர் அண்ணா அவர்களைத் தலைவராகப் பெற்றிருந்தும், திராவிட இயக்கத்தவர் திராவிடநாட்டைவேற்றாரின் ஆதிக்கப் பிடியிலேயிருந்து விடுவிக்கத் தவறிவிட்டார்கள்; அதனால் தான் இன்னும் நம் தாயகமான திராவிடம் அடிமைநாடாக வடவரின் காலடியில் தலைவணங்கும் இழிநிலையிலே இருக்கிறது! எப்படித்தான் அந்த அறிஞரைப் பயன்படுத்திக் கொள்ள மறந்தார்களோ, நம் முன்னோர்?'' என்றெல்லாம் வேதனைப்படும் நிலையினை எதிர்காலத்துச் சொந்தக்காரர்களுக்கு நாம் தந்துவிடக்கூடாது. ''திருவிடத்து மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் அண்ணாதுரையின் சொல்லுக்குத் தலைவணங்கி அந்த அறிவுலக மேதையின் அறிவுப்பாதையில் சென்றதால், நல்லதோர் இன்பபுரி–திராவிடத் தனியரசு கொண்டதோர் தாயகம் அமைத்துவிட்டனர். இனி அவர்களுக்கு இணை அவர்கள்தான்–அவர்களின் பிரதிநிதியை வரவேற்க நாமெல்லாம் தயாராகுவோம்'' என்று உலகமன்றத்தில் பேசப்படும் உயர் நிலையைப் பெற்றுத் தாருங்கள். அண்ணா! அதுதான் எங்களுக்குப் பெருமை! மொழிப்போராட்டமும், புதுவை – காரைக்கால் பொதுத் தேர்தலும், கழகத்தின் புதிய சட்ட அமைப்பு விதிகளும் மாயவரம் பொதுக்குழுவிலே முடிவாக்கப்பட்ட அருஞ்செயல்கள் ஆகலாம்! பொதுச் செயலாளரும் பொதுக்குழுவினரும் கழகத்தின் கண்ணியம் காத்திடும் இலட்சிய ஏந்தல்களுக்குக் ''களம் நோக்கி வாரீர்'' எனக் கட்டளையிடும் காலம் வந்துவிட்டதென்றே கருதுகிறோம். திராவிடத்தின் எல்லையோரங்கள் எல்லாம் ஆணைக்குத் தலைவணங்கத் தவறப்போவதில்லை! அருமை அண்ணா அவர்களே! இந்தக் கடிதம் சில கசப்பான உண்மைகளைச் சொல்லியிருக்கிறது. கழகத் தோழர்களின் இதய உணர்வுகளை இலட்சியத்துக்கு உயிராக்கி உங்களுக்கு அனுப்பிவைத்துள்ளேன். இந்தியத் துணைக்கண்டத்து அரசியலில் முன்னேற்றக் கழகம் என்றைக்குமே ஒரு அபாய அறிவிப்பாகத்தான் விளங்கப்போகிறதென்று அரசியல் இயக்கத்தின் முறைகளையும் நெறிகளையும் அறிந்தோர் உணர்ந்து கொண்டுவிட்டார்கள்! அரசியலில் சில கோமாளிகளும் நிரந்தரமான பல ஏமாளிகளும் குடியிருப்பதனால் நம்மீது குறிப்பாக, உங்கள்மீது அவதூறுகளைத் தருகிறார்கள். ஏசலுக்கு அஞ்சும் காலத்தை நாம் கடந்துவிட்டோம். இலட்சியக்கரை தெரிகிறது. கரம்காட்டி எம்மை அழையுங்கள். அண்ணா அவர்களே! தாயகத்தவர் விடுக்கும் அன்புக் கடிதத்தின் வேண்டுகோள் இது!

—கூடலரசன்

''தென்றல்''

ஆகஸ்ட் 22-ந் தேதி இதழில் தொடர்கிறது

கண்ணதாசன்

எழுதும்

''ஊமையன் கோட்டை''

(தொடர் கதை)

வடவர் ஏடுகள் தொடர்பு கொள்கின்றன!

சிரிப்புத்தான் வருகுதையா!

அடுத்த இதழில் வரும்.

—முன் பக்கத் தொடர்ச்சி—

மு. சு. மணிப்பாண்டியன், ஒட்டேரி.

சில காங்கிரஸ்காரர்கள் "அண்ணுதுரை ஓடுகிருர்! ஓடு கிருர்!" என்றலறுகிருர்களே—ஏன்?

காமராசரும் சுப்பிரமணியமும் கக்கனும் இராசாராமும் சாக் கடையிலே விழுந்துகிடக்கிருர் கள். தூக்கிப்போடுவதற்குத்தான் அண்ணு ஓடுகிருர்!

★

வ. சு. கணேசன், பன்ருட்டி.

எம். ஜி. ஆரின் உடல்நிலை தற் போது எப்படியிருக்கிறது?

செம்மையாகத் தேறி வருகிறது. சிறிதுகாலமாக அவர் நடித்த படம் ஒன்றும் வெளிவராமலிருப் பதில் ஒரு கூட்டம் மிகவும் உற் சாகப்படுகிறது. கால் முறிந்த அன்றைக்கு ஓர் அரசியல் சாம்பி ராணியின் வீடு கல்யாணக் கோலத்தில் திகழ்ந்ததாம்!

★

அரி. மதி, திண்டிவனம்.

ஓர் இதழில் "கட்டபொம்மன் படத்தில் ஊமைத்துரை முடிவு தெரியவில்லை. அவன் என்ன ஆனுன்?" என்ற வினுவிற்கு விடை தந்த தமிழ் மே(ல்)தாவி, இறுதியில் "இதை எல்லாம் கருப்புத் திரையில் மறைந்து விட்டது சிவகெங்கைச் சீமை" என்றெழுதியிருக்கிருரே! இலக் கணம் எப்படி?

தோழர் சிவஞானத்தின் தமிழறிவே அவ்வளவுதான். ஆனுல் இது ஒருவேளை அச்சுப்பிழையாக இருக்கலாம்.

★

வில்லியம் ஜெயராஜ், திருச்சி.

காங்கிரசார் அடிக்கடி நடத் தும் பொதுக்கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் ஒரு பெரிய நடிகரை அழைத்துக் கொண்டு வருவதன் நோக்கமென்ன?

காங்கிரசார் மட்டுந்தானு? சிவ ஞானம் அந்த நடிகரின் பாதங் களைக் கழுவி விடுகிருர். ஜீவா னந்தம் அதில் மலர்களைத் தூவு கிருர். அந்த நடிகர் புத்திசாலி. ஒரு கட்சியிலும் உறுப்பினராகா மல், மூன்று கட்சிகளைத் தன் காலடியில் போட்டுக்கொண் டிருக்கிருரே! பாவம், தலைவர் கள்! வாழ்க; அந்த நடிகர்!

★

இரா. இளங்தென்றல், சென்னை-21.

கழகம், கல்லூரி என்ற சொற் கள் வடமொழியின் மூலத்தி லிருந்து திரிந்து வந்தவை யென்று வையாபுரியார் ஒரு நூலில் எழுதியுள்ளாரே! உண்மை என்ன?

தமிழில் ஆராய்ச்சி செய்தவர்களைத் தமிழ்மக்கள் சுலபத்தில் மறந்து விடமாட்டார்கள். ஆனுல் வையா புரியாரை அடியோடு மறந்து விட்டார்கள். காரணம் இது தான். தமிழைக் காட்டிக்கொடுப் பதற்கென்றே பிறவி எடுத்தவர், அவர். ஒருவர் மறைந்ததால் தமிழ் பிழைத்தது என்ருல், அவர் மறைவே அது!

★

வி. கோதண்டராமன், வேலூர்

புரட்சிக் கவிஞர் என்ன செய்து கொண்டிருக்கிருர்?

தன்னைத்தானே புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிருர்!

இராசாராம், கோவை.

"அறிவிலி" என்ருல் என்ன பொருள்?

தயவுசெய்து சிவஞானத்தைப் பற்றியே கேள்வி கேட்க வேண் டாம்!

ஏன் இப்பொழுது தொடர்ந்து பல படங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன?

எம். ஜி. ஆர். படம் வருவதற்குள் ஓடி முடிந்துவிடுவோம் என்று ஓடி மறைகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர் காலம் என்ன?

கத்தி விழுமோ? சுத்தி விழுமோ? கழுத்து நிலைக்குமென்று தோன்ற வில்லை!

சென்னை-காமதேனு, பிரைட்டன், மகாலக்ஷ்மி மற்றும் தென்னுடெங்கும்

ஜூலை 24உ முதல் சென்னை கெயிட்டியில்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு